# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 362 கார்த்திகை 10 ஆம் நாள் புதன்கிழமை 25 நவம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


யாழ்ப்பாணத்தில்
## 11.9 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று காலை 8.30 மணியிலிருந்து இரவு 8.30 மணி 18 ➤




# யாழ். மாநகரத்துக்குள் பெண்ணுக்கு தொற்று!

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நேற்றுப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
இவரைவிட கே.கே.எஸ். கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப் பட்டுள்ள இரு கடற்படையினருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. 18 ➤

**11ஆம் திகதி கொழும்பிலிருந்து வந்தவர்**

**21ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டார்**

**சொந்த வாகனத்தில் கிளிநொச்சி பயணம்**

# நகர்கின்றது நிவர் புயல்!

**காற்று, மழையுடனான காலநிலை தொடரும்**

முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை மக்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25
வங்களா விரிகுடாவில் நிலைகொண்டிருந்த ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை நேற்றுக் காலை 7.42 மணியளவில் நிவர் புயலாக மாற்றமடைந்தது. அது மெதுவாக நகரத் தொடங்கியுள்ளது. நேற்று 17 ➤

# நினைவேந்த தடை கோரும் மனு மீதான கட்டளை இன்று!

## சட்டத்தரணி சிறிகாந்தா நேற்றுக் கடும் வாதம்

யாழ்ப்பாணம், நவ. 25
மாவீரர் நாள் நினைவேந்தலுக்குத் தடைவிதிக்கக் கோரும் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரின் விண்ணப்பம் மீதான விசாரணை இன்று புதன்கிழமை காலை 11 மணி வரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. வழக்கு நேற்றுக் காலை எடுக்கப்பட்டபோது, வழக்குத் தொடுநர் சார்பில் மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி பிரபாகரன் குமாரரட்ணம் நேற்று பிற் 18 ➤

## கொரோனாவால் 4 பேர் உயிரிழப்பு

*இதுவரை 94 பேர் சாவு*

கொழும்பு, நவ.25
இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தால் மேலும் நால்வர் உயிரிழந்துள்ளனர் 19 ➤

*முச்சந்தி முரளி*

"ஒரு பக்கம் கொரோனா இன்னொரு பக்கம் புயல் எண்டு எந்தப்பக்கம் போனாலும் சிக்கலாப் போச்சுது பாருங்கோ"



## நினைவேந்தலை தடுப்பதற்கு மூத்த அதிகாரிகள் களத்தில்!

கொழும்பு, நவ.25
மாவீரர் நினைவேந்தல் தடையை நீக்கக்கோரி வடக்கு மாகாணத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையில் நீதி 17 ➤

யாழ். நகர உணவகத்தின்
## பணியாளர் இறப்புக்கு மாரடைப்பே காரணம்

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள உணவகத்தில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டவர் இருதய 17 ➤

## தனிமைப்படுத்திய 4 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 4 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
தொற்று உறுதி செய்யப்பட்ட 17 ➤

## 5 ஆண்டுகளுக்குப் பின்னர் பிள்ளையானுக்குப் பிணை!

மட்டக்களப்பு, நவ.25
கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் அல்லது பிள்ளையான் உள்ளிட்ட 5 பேரும் மட்டக்களப்பு மேல் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
5 ஆண்டுகளின் பின்னர் இவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். 18 ➤

## சீரற்ற வானிலை: 40 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ்ப்பாணத்தில் காற்றுடன் கூடிய மழை காரணமாக மூன்று பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 குடும்பங்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் நேற்று மாலை 17 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது
செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி
Brand Finance Rating "A +" Fitch Rating: "A" (lka)

Mobitel Master unlimited
உங்களுக்கு விருப்பமான UNLIMITED பக்கேஜைத் தெரிவு செய்யுங்கள்
அழையுங்கள் 1717
வரையறுக்கப்பட்ட சலுகை Mobitel.lk/master
UNLIMITED CALLS மாதாந்தம் ரூபா. 1500/- மட்டுமே
UNLIMITED CALLS & DATA மாதாந்தம் ரூபா. 3,999/- மட்டுமே
Sri Lanka Telecom Mobitel

# பயங்கரவாதம் தலைதூக்கினால் தமிழ் அரசியல்வாதிகளே காரணம்!

புலிகளை நினைவுகூர்ந்தவர்களிடம் விளக்கம்கோரி எம்.பி. பதவியை பறிக்கவும் என்கிறார் சரத் வீரசேகர

**கொழும்பு, நவ. 25**
**நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கினால் அதற்கு தமிழ் மக்கள் மத்தியில் இனவாத்தை விதைக்கும் தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்புக்கூற வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



அத்துடன், நீதிமன்ற உத்தரவை மீறி புலிகளை நினைவுகூர்ந்தால் அது தொடர்பில் அவர்களிடம் விளக்கம்கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாடாளுமன்றத்திலுள்ள சில தமிழ் அரசியல்வாதிகள், சிங்கள மக்களுக்கு எதிராக தமிழ் மக்களின் மனங்களில் குரோதத்தை விதைக்கும் வகையில் தொடர்ச்சியாக கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். தமது பிரதேசத்துக்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கதைக்காமல் சிங்கள இனத்தையும், இராணுவத்தினரையும் அவமதிக்கும் விதத்திலேயே உரையாற்றி வருகின்றனர்.

பிரிவினைவாதத்தைத் தூண்டும் வகையிலான தமிழ் அரசியல்வாதிகளின் அறிவிப்புகளும், தமிழ் இளைஞர்கள் அன்றும் ஆயுதம் ஏந்துவதற்கு ஓர் காரணியாக அமைகின்றன. உலகில் எந்தவொரு நாடும் போர்மூலம் பயங்கரவாத அமைப்பை ஒழித்துக்கட்டவில்லை. ஆனால் நாம் அதனை செய்துமுடித்தோம்.

பயங்கரவாதிகளுக்குள் நடுநிலைவாதி என்பவர் கிடையாது. பயங்கரவாதி என்பவர் பயங்கரவாதிதான். ஆகவே, பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்கினால், அதற்கு இனவாத்தைத் தூண்டும் வகையில் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்புக்கூறவேண்டும்.

புலிகள்தான் சமாதான காலப்பகுதியில்கூட மனித உரிமைகளை மீறினர். அப்பகுதியில் உள்ள மக்களை நாமே பாதுகாத்தோம். அப்போது இந்த அரசியல்வாதிகள் கொழும்பில் இருந்துகொண்டு சுகபோகம் அனுபவித்தனர். 2 லட்சத்து 90 ஆயிரம் மக்களைப் பாதுகாத்தே நாம் போரை முடித்தோம். மீள்குடியேற்றத்திலும் சாதனை படைத்தோம். புலம்பெயர் தமிழர்களிடம் பணம்வாங்குவதற்காக மனித உரிமைகள் பற்றி கதைப்பதற்கு எவ்வித அருகதையும் கிடையாது. போர்க்குற்றம் நடக்கவில்லை என்பதை சர்வதேச நிபுணர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதேவேளை, பயங்கரவாதிகளை நினைவுகூர நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவையும்மீறி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நினைவுகூர்ந்துள்ளார். புலிகள் நாட்டைப் பிரிக்க போராடியவர்கள். அவர்களை நினைவுகூருவது என்பது பிரிவினைவாதத்தை ஏற்கின்றோம் என்பதாகும். அவ்வாறு பிரிவினைவாதத்தை ஏற்றால் நாடாளுமன்றத்தில் எவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்யமுடியும்? எனவே, அது தொடர்பில் விளக்கம்கோர வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பறிக்கவேண்டும், என்றார். (ஒ,44)

## விசாரணைக்கு பயந்து ஏன் ஒளிக்கின்றீர்கள்?


*அரசிடம் கஜேந்திரகுமார் கேள்வி*

கொழும்பு, நவ. 25

போரின்போது படையினர் தவறிழைக்கவில்லையென உறுதியாகக் கூறும் ஆளுந்தரப்பு, சர்வதேச விசாரணைக்கு எதிர்ப்பை வெளியிடுவது ஏன் என்று தமிழ் மக்கள் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர, படையினர் போர்க் குற்றம் இழைக்கவில்லை எனவும், ஆறு வெளிநாட்டு நிபுணர்கள்கூட இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டதுடன், தமிழ் அரசியல் தலைவர்கள் மீதும் கடும் விமர்சனங்களையும் முன்வைத்தார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினையொன்றை எழுப்பிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், படையினர் தவறிழைக்கவில்லை, உரியவகையில் செயற்பட்டனர் என்று உறுதியாக நம்புகின்றீர்களெனில் சர்வதேச விசாரணை பொறிமுறைக்கு எதிராக செயற்படுவது ஏன்? தமிழ் மக்களுக்கு நீங்கள் கூறுவது போல சேவைகளை வழங்கியிருந்தால் விசாரணைக்கு உட்படலாம் அல்லவா? அதனை விடுத்து எதற்கு வெள்ளையடிப்பு செய்யும் அறிவிப்புகள்?, என்று கேள்வி எழுப்பினார். (ஒ,44)



மன்னார் உயிர்த்தராசன்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனைக் கருதத்தில் கொண்டு, சமூக சேவகர் டக்ஸன் ஒரு தொகுதி முகக்கவசங்களை பாடசாலை நிர்வாகத்திடம் கையளித்தார். (க-56)

## யாழ்ப்பாண மீனவர் இந்தியக் கரையில்

கொழும்பு, நவ. 25

இலங்கையைச் சேர்ந்த மீனவர் படகுடன் இந்திய கடற்கரையில் ஒதுங்கியுள்ளார். யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 23 வயதுடைய விஜயமூர்த்தி என்பவரே இவ்வாறு கரை ஒதுங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது பலத்த காற்று வீசியதால் படகு திசைமாறி இந்தியாவின் நாலுவேதபதி கடற்கரை பகுதிக்குச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது. (ஒ,இ)



## மாணவர்களுக்கு கொரோனா தொற்றும் வாய்ப்புக் குறைவு

*பிரியந்த அத்தப்பத்து கண்டுபிடிப்பு*

கொழும்பு, நவ.25

பாடசாலை மாணவர்களில் 60-70 சதவீதமானோரின் நோய் எதிர்ப்பு ஆற்றல் வலுவான நிலையிலுள்ளது என்றும் இதனால் மாணவர்கள் கொவிட்-19 தொற்றுக்கு ஆளாகக்கூடிய நிலை குறைவாகவுள்ளது என்றும் சுகாதார அமைச்சுடன் இணைந்த முதன்மைப் பராமரிப்புச் சேவைகளின் இயக்குநர் பிரியந்த அத்தப்பத்து தெரிவித்தார்.

மேலும் மாணவர்கள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க சிவப்பரிசிச் சோறு, பச்சை இலை வகைகள், காய்கறிகள் மற்றும் மீன் அடங்கிய உணவுகள், தானியங்கள், கிழங்குகள், பழங்கள், விற்றமின் டி,சி,ஏ அடங்கிய உணவு மற்றும் சூரிய ஒளியைப் பெறுதலும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சுத்தமான நீரைப் பருகுதலும் நோய் எதிர்ப்பு ஆற்றலை அதிகரிக்கும் - என்றார். (ற-இ)

# பிரதேச, மாவட்ட செயலகங்களுக்கு இராணுவத்தினரை நியமிக்கத் திட்டம்

*ஐக்கிய மக்கள் சக்தி அச்சம்*

கொழும்பு, நவ. 25

பிரதேச செயலகம் மற்றும் மாவட்டச் செயலகம் ஆகியவற்றுக்கு இராணுவ அதிகாரிகளை நியமிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்துவ பண்டார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் மிகச் சிறந்த நிர்வாக சேவை இலங்கையில் இருக்கின்றது. அதிகாரிகளும் இருக்கின்றனர். காலணித்துவ ஆட்சியின்போதும் அதன்பின்னரும் சிவில் சேவைகளுக்கு நிர்வாக அதிகாரிகளே நியமிக்கப்பட்டனர்.

ஆளுநர் பதவிகூட நிர்வாக மட்டத்திலான அதிகாரிகளுக்கே வழங்கப்பட்டது. ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

சிவில் நிர்வாகத்தை உள்ளடக்கிய உள்நாட்டலுவல்கள் அமைச்சு ஏன் பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது? பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் ஆகியவற்றுக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர் என எமக்கு தகவல் கிடைத்துள்ளது. இது உறுதியான தகவலா என்று தெரியவில்லை. இது தொடர்பில் அரசு தெளிவுபடுத்தவேண்டும். மியன்மார் போன்றதொரு நிலைமையை இங்கும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா?

இதற்கு முன்னரும் நிர்வாக சேவைக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். துறைமுகம், நுகர்வோர் பிரிவுகள் உரிய வகையில் செயற்படவில்லை. நாம் இராணுவத்துக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் சிறப்பான நிர்வாக அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களை புறக்கணிக்கும் வகையில் செயற்படக்கூடாது- என்றார். (ஒ,44)

## யாழ் பல்கலைக்கழக

# விஞ்ஞானபீடத்தில் புத்தாக்க பற்றரி தொழில்நுட்ப ஆய்வுகூடம்!

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உலக வங்கி அனுசரணையுடன் புத்தாக்க மின்கல (பற்றரி) தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள் இரண்டு திறந்து வைக்கப்படவுள்ளன.

நவீனமயப்படுத்தப்பட்ட இவ் ஆய்வுகூடங்களின் திறப்புவிழா இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தரும், முன்னாள் விஞ்ஞானபீடதிபதியுமான பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா இந்த ஆய்வுகூடங்களை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் துறைகள் இணைந்து முன்னெடுக்கும் பற்றரி ஆராய்ச்சியின் திட்ட வரைவின் தரத்தினைக் கருத்தில் கொண்டு உலகவங்கி தனது அபிவிருத்தியை நோக்கிய ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் நான்கு கோடி ரூபா நிதிப்பங்களிப்பினை வழங்கியுள்ளன. இந்த ஆராய்ச்சி முன்னெடுப்புக்கள் 2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரையான மூன்று வருட காலத்துக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திட்டமிடப்பட்ட ஆராய்ச்சியை வசதிப்படுத்துவதற்காக இரண்டு ஆய்வுகூடங்கள் பௌதீகவியல்துறை மற்றும் இரசாயனவியற்துறையில் மறுசீரமைக்கப்பட்டு உயர் தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்கள் பொருத்தப்பட்ட சர்வதேச தரத்திலான பற்றரி ஆராய்ச்சிக்கான ஆய்வுகூடங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் அதிசெயற்திறன் உடைய கணினிகள், புகைப்படக் கருவிகள், தொடர்பு சாதனங்கள் போன்ற இலத்திரனியல் கருவிகளின் நீண்டகால பாவனைக்கு உகந்த அதே நேரம் உற்பத்திச் செலவும் குறைந்த பற்றரிகளை உருவாக்குவதற்கான ஆய்வு நடவடிக்கைகள் திட்ட மிட்டபடி முன்னெடுக்கப்படவுள்ளன.

தற்போது கணினிகள், புகைப்படக் கருவிகள், தொடர்பு சாதனங்கள் போன்ற இலத்திரனியல் கருவிகளின் நீண்டகால பாவனைக்கு கிடைத்தற்கரிய லித்தியம் மின்பகுபொருள் கொண்ட பற்றரிகள் பயன்படுத்தப்படுகின்றன. யாழ் பல்கலைக்கழகத்தில் திட்டமிடப்பட்டு நடைபெற்றுவருகின்ற ஆராய்ச்சியில் எளிதில் கிடைக்கக்கூடிய சோடியம் மற்றும் மக்னீசியத்தைப் பயன்படுத்தி புத்தாக்கமாக பல சவால்களை எதிர்கொண்டு மேம்பாடான உற்பத்திச் செலவு குறைந்த எளிதில் கிடைக்கக்கூடிய பற்றரிகளின் தொழில்நுட்பமானது வடிவமைக்கப்படவுள்ளது. மேற்படி புத்தாக்கத் தொழில்நுட்பத்திட்டமானது உலகளாவிய பரிமாணம் கொண்டது. அரிசோனா அரச பல்கலைக்கழகம் அமெரிக்கா, சால்மேர்ஸ் தொழிநுட்பப் பல்கலைக்கழகம் சுவீடன், தேசிய விஞ்ஞான நிறுவனம் கண்டி, விஞ்ஞானபீடம் யாழ் பல்கலைக்கழகம் என்பவற்றின் கூட்டு ஆராய்ச்சித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

யாழ் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களான பௌதீகவியற்துறையைச் சார்ந்த கலாநிதி கந்தசாமி விக்னரூபன், சிவசுப்பிரமணியம் செந்தூரன், மற்றும் இரசாயனவியற்துறையைச் சார்ந்த பேராசிரியர் குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி, கலாநிதி கணேசலிங்கம் சசிகேஷ் ஆகியோர் இப்புத்தாக்க பற்றரி தொழில்நுட்பத்துக்குரிய ஆராய்ச்சிக்கு மூலில் முக்கிய பங்காற்றுகின்றனர்.

இவ்வாராய்ச்சியாளர்களின் வழிகாட்டுதலில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆறு விஞ்ஞானமாணி பட்டதாரிகள் புத்தாக்க ஆராய்ச்சிகளை மேற்கொண்டு முதுவிஞ்ஞான மாணி பட்டப்படிப்புப் பயிற்சியை பெற்று வளவாளர்களாக மேன்மையடையவுள்ளனர். (ஓ.5)

# கிளிநொச்சியில் புதிய கல்வி வலயம்

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை காலமும் கிளிநொச்சி கல்வி வலயம் மாத்திரம் இருந்து வந்த நிலையிலேயே அதனை இரண்டாகப் பிரித்து புதிய ஒரு கல்வி வலயத்தை உருவாக்குவதற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாகாண மற்றும் மாவட்ட உயர் அதிகாரிகள், ஓய்வுபெற்ற கல்வி அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு ஆய்வுகள், மற்றும் ஆலோசனைகள் பெறப்பட்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதுவரை காலமும் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை என்று நான்கு கோட்டக் கல்வி பிரிவுகளாகவும் கிளிநொச்சி கல்வி வலயம் என்று ஒரு கல்வி வலயமாக 104 பாடசாலைகளுடன் 32 ஆயிரத்து 28 மாணவர்கள் 2 ஆயிரத்து 35 ஆசிரியர்கள் 28 உயர்தர வகுப்புக்ளைக் கொண்ட பாடசாலைகள் என்று இயங்கி வருகிறது.

கிளிநொச்சி கல்வி வலயத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதன் முன்னேற்பாடாக மாகாண, மாவட்ட மட்ட உயரதிகாரிகள் இத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.


கிளிநொச்சி, கரைச்சி கல்வி கோட்டத்தை தனியாக ஒரு வலயமாகவும் பளை, பூநகரி, கண்டாவளை ஆகிய மூன்று கல்விக் கோட்டங்களையும் இணைத்து ஒரு வலயமாகவும் உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.முக்கியமாக மாணவர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இவ்விரண்டு வலயங்கள் உருவாக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கரைச்சி கல்வி கோட்டத்தில் 18 ஆயிரத்து 323 மாணவர்களும், ஏனைய மூன்று கோட்டங்களிலும் 13 ஆயிரத்து 705 மாணவர்களும் தற்போதுள்ளனர். பளை, பூநகரி, கண்டாவளை ஆகியவற்றின் மையப்பகுதியான பரந்தன் பகுதியில் புதிய வலயக் கல்வி அலுவலகத்தை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஓ.214)

## அவிசாவளையில் பெண் மருத்துவருக்கு கொரோனா

கொழும்பு, நவ.25

அவிசாவளை அரசாங்க மருத்துவமனையின் மருத்துவர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அவிசாவளையிலுள்ள மாவட்ட அரசாங்க மருத்துவமனையில் ஆரம்ப சிகிச்சை பிரிவில் கடமையாற்றும் பெண் வைத்தியர் ஒருவருக்கே வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்தது. (ற-இ)



# நீதி பெற்றுத் தாருங்கள் அல்லது தூக்கிலிடுங்கள்

*தமிழ் அரசியல் கைதி ஜனாதிபதிக்குக் கடிதம்*

கொழும்பு, நவ. 25

நிரபராதி என்று நிரூபிக்கும் வாய்ப்பு தனக்கு முற்றாக மறுக்கப்படுகிறது என்று கூறும் தடுப்பிலுள்ள அரசியல் கைதி, தன் மீதான தீர்ப்புக்கு எதிராகச் செய்துள்ள மேன்முறையீட்டை விசாரிக்கவேண்டும். அல்லது குற்றவாளி என்று தன்னை அறிவித்து தூக்கிலிட வேண்டும் என்று ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள கனகசபை தேவதாசன் (வயது - 63) என்பவரே கடிதம் எழுதியுள்ளார். கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை வைக்கப்பட்டிருக்கிறேன். கொழும்பு மேல்நீதிமன்றில் சட்டமா அதிபர் எனக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட 2 வழக்குகளிலும் முறையே 20 ஆண்டுகள் சிறை மற்றும் ஆயுள் தண்டனை என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து நான் மேன்முறையீடு செய்துள்ளேன். இந்த வழக்குகளை விரைவில் முடிவுக்குக்கொண்டுவர விரும்பி இரண்டிலும் எனக்காக நானே வாதாடுகிறேன். ஆனாலும் மேற்படி 2 மேன்முறையீட்டு வழக்குகளும் நீதி நடைமுறையின் வீண் தாமதம் மற்றும் கொரோனா பரவல் காரணமாக முற்றாக முடங்கி விட்டன. இதன் மூலம், நிரபராதி என்று நிரூபிக்கும் வாய்ப்பு எனக்கு முற்றாக மறுக்கப்படுகிறது. மறைமுகமாக, என் அடிப்படை உரிமை அப்பட்டமாக மீறப்படுகிறது.

இதனை விளக்கி தங்களுக்கு சிறையூடாக 6 மாதங்களின் முன்பாக கடிதம் அனுப்பினேன். துரதிஷ்டவசமாக அதற்குப் பதில் இன்னமும் வந்துசேரவில்லை. எனவே இவந்த விடயத்தை இன்று வேறு வழியின்றிப் பகிரங்கப்படுத்துகிறேன். எனது இந்த 2 மேன்முறையீட்டு வழக்குகளையும் துரித விசாரணைக்கு உட்படுத்த ஜனாதிபதி உத்தரவிடவேண்டும்.

அல்லது இந்த 2 வழக்குகளிலும் நான் பிணை பெற ஆவனசெய்து உதவுமாறு கோருகிறேன்.

மேற்சொன்ன கோரிக்கைகளை நிறைவுசெய்யும் இயலுமை தங்களுக்கு இல்லை என்று தாங்கள் கருதும் பட்சத்தில் அரசமைப்பில் தங்களுக்குத் தரப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி எனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை தூக்குத் தண்டனையாகத் தரமுயர்த்தி "போர்க்குற்றவாளி" என்று என்னைப் பிரகடனப்படுத்தி உடனடியாகவே பகிரங்கமாக என்னைத் தூக்கிலிட உத்தரவிடுங்கள். என்னுடைய இந்த முடிவு தொடர்பில் யாரும் என்னை ஆற்றுப்படுத்த முனைய வேண்டாம்.

எனக்கு நீதி வேண்டும் அல்லது மரணம் வேண்டும் அவ்வளவு தான்! என்றுள்ளது. (த)

# சர்வதேசத்தை பகைக்க அரசு முயற்சிக்கின்றது

## லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு



கொழும்பு, நவ.25

**இறக்குமதிகளைத் தடை செய்து அரசாங்கம் சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு செல்லவே முயற்சிக்கின்றது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு செயற்படவே முயற்சிக்கின்றது. இறக்குமதி தடைசெய்யும் போது எமது ஏற்றுமதிகளும் தடைசெய்யப்படுகின்றன. அரசாங்கத்தின் இறக்குமதித் தடைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்தி ருக்கின்றது.

ஏனெனில் ஐரோப்பிய ஒன்றியம் சுமார் 25 வீதம் எமது பொருள்களைக் கொள்வனவு செய்கின்றது. அதேபோன்று அமெரிக்காவும் கொள்வனவு செய்கின்றது. ஆனால் சீனா ஒருவீதமே எமது பொருள்களைக் கொள்வனவு செய்கின்றதை அரசாங்கம் மறந்துவிடக்கூடாது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் நாங்கள் ஐக்கிய நாடுகளுடன் பல ஒப்பந்தங்களைச் செய்திருந்தோம்.

மேலும் ஏகாதிபத்திய ஆட்சி இருக்கும் நாடுகளுக்கு முதலீட்டாளர்கள் வருவதில்லை. சீனாவில் சுயாதீன நீதிமன்றம் அமைக்கப்படும் வரை 3 வருடங்கள் அங்கு முதலீட்டாளர்கள் செல்லவில்லை. எமது நாட்டிலும் 20ஆவது திருத்தம் மூலம் நீதிமன்றச் சுயாதீனத் தன்மை இல்லாமல் போயுள்ளது. 19ஆம் திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனச் செயற்பாடுகள் 20ஆம் திருத்தம் மூலம் இல்லாமல் போயுள்ளது. அதனால் நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை ஜனாதிபதி பெயரிடுபவர்களை ஆணைக்குழு ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ப-இ)

# அனைத்து மதங்களுக்கும் நிதி ஒதுக்கீடுகள் தேவை!

## சாணக்கியன் எம்.பி கோரிக்கை

கொழும்பு, நவ. 25

அனைத்து மதங்களுக்கும் விகிதாசார அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பௌத்த மதத்துக்கு 300 மில்லியன் ரூபாவும் இந்து மதத்துக்கு 8 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு கருத்துரையிலேயே சாணக்கியன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏனைய மதங்களுக்கும் விகிதாசார அடிப்படையில் பணம் ஒக்கீடு செய்யப்பட வேண்டும். புத்தசர்சன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்தும் வகையில் பிரதமர் தலைமையில் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். குறித்த ஆணைக்குழுவின் ஊடாக இவ்வாறான நிதியொதுக்கீடுகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம-இ)

# அரசின் செயற்பாடுகளில் மகா சங்கத்துக்கு அதிருப்தி

## ராஜித எம்.பி சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ.25

நல்லாட்சி அரசாங்கத்தைத் தோல்வியடைச் செய்து தற்போதைய அரசாங்கத்தை ஆட்சியின் அமர்த்த பௌத்த மகா சங்கத்தினர் முயற்சித்தி ருந்தனர். எனினும் தற்போது மகா சங்கத்தினரே அதிருப்தியடைக் கூடிய வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நல்லாட்சி அரசாங்கத்தில் பௌத்த மதகுருமார்கள் பழிவாங்கப்படுகின்றனர் எனக் கூறப்பட்டது. எனினும் தற்போதைய அரசாங்கத்திலேயே அவ்வாறு இடம்பெறுகிறது. மகா சங்கத்தினராலேயே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் தற்போது அவர்களே அதிருப்தியடையும் வகையிலான செயற்பாடுகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் குறைந்தளவான நிதி ஒதுக்கீட்டில் பெருமளவான அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும் வகையிலான வேலைத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இவை அனைத்தும் பொய்யாகும். காரணம் அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி எந்த சந்தர்ப்பத்திலும் போதாது. இது மாத்திரமின்றி வெளிநாடுகளில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் வியாபாரம், விபச்சாரம், ஆயுத விற்பனை என்பவற்றின் மூலம் கிடைக்கும் கறுப்புப் பணத்தை நாட்டுக்கு வரவழைப்பதற்கு ஆதரிக்கும் வகையிலான முன்மொழிவும் இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது சர்வதேச சட்டத்தையும் மீறும் வகையிலான செயற்பாடாகும் - என்றார். (ப-இ)

# 49,478 பட்டதாரிகளுக்கு இதுவரை நியமனம்

கொழும்பு, நவ.25

60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் அரசாங்கத்தின் செயற்திட்டத்தின் கீழ் இதுவரை 49ஆயிரத்து 478 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று பொதுநிர்வாக, மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிகுதி ஆயிரத்து 175 பேருக்குமான நியமனங்களை விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சம்பந்தப்பட்ட பட்டதாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக ஏனையவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட வில்லை. சுகாதாரத் துறையினரின் பரிந்து ரைக்கு அமைய அவர்களுக்கான பயிற்சிகளை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-இ)



# கல்விச்சேவை அமைப்பால் மாணவர்களுக்கு உதவிகள்

தெல்லிப்பழை,நவ.25

தமிழ் கல்விச்சேவை சுவிஸ்லாந்து அமைப்பினரால், யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலை, அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, அளவெட்டி வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்களுக்கு, துவிச்சக்கர வண்டிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (க-63)

# மீண்டும் சர்ச்சையில் சிக்கிய ஹிஸ்புல்லாவின் மட்டு.பல்கலை

கொழும்பு, நவ.25

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர், எம்.எல்.எம்.ஏ.எல். ஹிஸ்புல்லாஹ்வுக்குச் சொந்தமான மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தின் இலங்கை வங்கியின் கொள்ளுபிட்டிக்கிளையில் உள்ள வங்கிக்கணக்கு தொடர்பில், கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னரேயே சந்தேகம் எழுந்தது என நேற்று வெளிப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே அவ்வாண்டு ஜூலை மாதத்தில் அந்த வங்கிக்கணக்கு தொடர்பில் மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தப்பட்டது.

இலங்கை வங்கியின் கொள்ளுபிட்டி கிளையின் முன்னாள் முகாமையாளர் ஐ.சி.கே. கண்ணங்கர, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவில் நேற்று சாட்சியம் வழங்கும் போதே மேற்படி விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

2016 ஆம் ஆண்டு முதல், மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் பிரைவட் லிமிட் எனும் குறித்த நிறுவனத்தின் 78495137 எனும் நடைமுறைக் கணக்குக்கு 364கோடியே 9லட்சத்து 39ஆயிரத்து 488 ரூபா 72 சதம் வெளிநாட்டிலிருந்து கிடைத்துள்ளது. பல்கலைக்கழக கட்டுமாணங்கள், காணிக் கொள்வனவு போன்ற விடயங்கள் வெளிப்படையாக இடம்பெற்றதால் அவ்வாறு கிடைத்த பணம் தொடர்பில் எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை. அதனால் இலங்கை வங்கி குறித்த வங்கிப் பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் திருப்தியடைந்தது.

அதி அபாயகரமான கணக்காக மத்திய வங்கிக்கு குறித்த வங்கிக் கணக்கை அறிவிக்க தேவை ஏற்படவில்லை என்று அவர் மேலும் சாட்சியமளித்தார். (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வருமுன் காப்போம்!

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு மையம் புயலாக மாற்றம் பெறுவதற்குரிய சாத்தியங்கள் மிகவும் அதிகரித்துள்ளன. ஆபத்தானதாக இந்த 'நிவர்' புயல் அமையும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. இந்தியாவின் ஊடாக புயல் கரை கடந்தாலும், வடக்குக்கு கணிசமான அளவு பாதிப்புக்கள் ஏற்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. இது பேராபத்தான நிலைதான்.

எனினும் பதற்றம் அடைந்து பதறியடித்துத் திரிவதால், புயல் மாற்றுப்பாதையால் சென்றுவிடப் போவதில்லை. ஆகவே ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமே புயலால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையாவது நாம் ஓரளவு கட்டுப்படுத்த முடியும்.

நேற்றுமுன்தினம் சுமார் 9 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்த இந்தப் புயல் நேற்று சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் நகராமல் ஓரிடத்தில் நின்றது. அதன் பின்னர் தனது வேகத்தைக் குறைத்து சுமார் 5 கிலோமீற்றர் வேகத்தில் நகர ஆரம்பித்தது. இது புயல் மேலும் வலுப்பெற்றதையே காட்டுகின்றது என்கின்றனர் துறைசார் வல்லுநர்கள்.

அத்துடன்தற்போதைய வேகத்தின்படி பார்த்தால் இன்று இரவு அல்லது நாளை காலை புயல் கரை கடக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடும் எச்சரிக்கைகளை அடுத்து வடக்கின் அனைத்து மாட்டச் செயலகங்களும் இடர்மீட்புப் பணிக்காகத் தம்மைத் தயார்படுத்தி வைத்துள்ளன. பொதுமக்களும் இயன்ற வரையில் புயலை எதிர்கொள்வதற்கு தம்மைத்தாமே தயார்படுத்தி வைத்திருக்க வேண்டும். வீடுகளுக்கும், மின்கம்பங்களுக்கும் அருகில் விசாலமாக வளர்ந்துள்ள மரக்கிளைகளை வெட்டுவதன் மூலம் தேவையற்ற கட்டட இடிபாடுகளையும், அசம்பாவிதங்களையும் தவிர்த்துக் கொள்ளலாம். புயல் தாக்கினால் மின்வெட்டு தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும். அவ்வாறு மின்வெட்டு ஏற்படும் பட்சத்தில் அதை எதிர்கொள்ளக்கூடிய வகையில் மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளல் அவசியம்.

அதேபோல் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் சிறுவர்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் என்பனவற்றைக் கொள்வனவு செய்து தயார் நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். மருந்துப் பொருள்களைத் தயார் நிலையில் வைத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வாறான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் புயலை எதிர்கொள்வதைத் தவிர்க்க முடியாவிட்டாலும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைக்க முடியும்.

கல்வீடுகளிலும், பலமான வசதி வாய்ப்பான கட்டடங்களிலும் இருப்பவர்களே இந்தப் புயலை எதிர்கொள்ள அச்சப்படுகையில், ஓலைக்குடிசைகளில் இருப்பவர்கள் இந்தப் புயலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றனர்?. அவர்களில் பெரும்பாலானவர்களின் இருப்பிடங்கள் காற்றோடு காற்றாகத் தூக்கி வீசப்படலாம். ஏதிலிகளாகவும், நிர்க்கதியற்றவர்களாகவும் அவர்கள் நிவார் புயலால் ஆக்கப்படலாம். அத்தகையவர்களை உரிய அதிகாரிகள் இனங்கண்டு மிகத்துரித கதியில் மாற்று இடங்களில் அவர்களைத் தங்கவைக்க வேண்டும். புயல் வந்த பின்னர் மீட்பு என்ற மெத்தனப்போக்கில் இருந்துவிடாமல், வெள்ளம் வரு முன்னே அணை கட்டுவது போல, போர்க்கால அடிப்படையில் இதற்குரிய நகர்வுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

# மாவீரர் நாளை முன்னிட்டு மன்னாரில் கடும் பாதுகாப்பு

மன்னார், நவ.25

எதிர்வரும் 27 ஆம் திகதி தாயகப் பகுதிகளில் உணர்வெழுச்சியுடன் நடைபெற இருக்கும் மாவீரர் நாளை முன்னிட்டு மன்னார் மாவட்டம் எங்கும் புதிதாக இராணுவ - பொலிஸ் காவலரண்களுடன் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மன்னாரின் மாந்தை மேற்கு நானாட்டான் வீதிகளிலும் புதிய காவலரண்கள் போடப்பட்டுள்ளன.

மாவீரர் துயிலுமில்லங்கள் படையினரால் கண்காணிக்கப்பட்டு வருவதுடன், வாகனங்களும் சோதனை செய்யப்படுகின்றன. இதனால் அச்ச உணர்வுடன் மக்கள் காணப்படுகின்றனர். (ஜ-213)

## ஹெரோய்ன் விற்பனைக் குற்றச்சாட்டு: 13 அதிகாரிகளுக்கும் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25

ஹெரோய்ன் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள 13 பொலிஸாரையும் எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் லங்கா ஜயரத்ன முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

## படையினரின் வாகனம் மோதி ஒருவர் காயம்

சாவகச்சேரி. நவம்.25

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பத் தலைவர் படையினரின் வாகனம் மோதிக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை ஏ-9 வீதியில் இடம்பெற்றது. மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 29 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார். காயமடைந்த அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ப-9)

## சீரற்ற காலநிலையால் மீன்பிடியில் பெருவீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 25

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பதைத் தவிர்த்துள்ளனர்.

வங்கக்கடலில் மையம் கொண்டுள்ள புயல் காரணமாக வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிக் கடலில் சுமார் 10 அடி வரைக்கும் அலைகளின் தாக்கம் இருக்கும் என்று ஏற்கனவே எச்சரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மழை மற்றும் கடல்கொந்தளிப்பு நிலவுவதால், மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. இதனால் மீன்களின் விலை நேற்று சற்று அதிகரித்துக் காணப்பட்டது. (ம-17)

## 7 ஆவது தடவையாக மைத்திரிபால சாட்சியம்



கொழும்பு.நவ.25

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில், 7 ஆவது தடவையாக ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றுச் சாட்சியமளித்தார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக, அவர் இதற்கு முன்பு 6 தடவைகள் வாக்குமூலம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

# "சூம்" ஊடாக கற்றல் நடவடிக்கை; உறுதியான கொள்கை வகுக்கப்படும்

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ.25

நெருக்கடியான சூழ்நிலையில் "சூம்" ஊடாக பாடசாலை கற்றல் நடவடிக்கையை முன்னெடுக்க உறுதியான கொள்கை வகுக்கப்படும் என தொலைநோக்குக் கல்வி முறைமை இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எவ்வித பிரச்சினைகளுமின்றி இடம்பெற்று முடிந்துள்ளது. பாடசாலை விடுமுறைக் காலத்தில் "சூம்" கல்வி முறைமை ஊடாக கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் எக்காலத்திலும் எதிர்பார்க்கும் விதமாக உள்ளது. விடுமுறை காலத்தில் சூம் ஊடாக கற்றல் நடவடிக்கையை முன்னெடுக்க உறுதியான கொள்கை வகுக்கப்படும் - என்றார். (ஐ-இ)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2020
இயற்கையே எனது இறைவன். எனக்கு இயற்கை புனிதமானது. மரங்கள் என் கோயில்கள், காடுகள் என் தேவாலயங்கள். - மிகைல் கோபர்ச்சேவ்

# சஹ்ரான் மனைவியின் வாக்குமூலம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

## நளின் பண்டார எம்.பி வேண்டுகோள்



கொழும்பு, நவ.25

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானின் மனைவி வழங்கும் வாக்குமூலங்கள் அனைத்தும் ஊடகங்கள் வாயிலாக பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, திடீரென அவர் இறந்துவிட்டால் என்ன செய்வது எனக் கேள்வியெழுப்பினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புடைய சாரா, இந்தியாவுக்குத் தப்பியோடியிருக்கின்றார். அவரை நாட்டுக்குள் அழைத்து வர வேண்டும் என்றும் அவர் இதன்போது தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி சஹ்ரானின் மனைவி வழங்கும் வாக்குமூலங்கள் அனைத்து ஊடகங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்பட வேண்டும். ஒரு வேளை அவர் உயிரிழந்தால் அவர் வழங்கும் தகவல்கள் அனைத்தும் மூடி மறைக்கப்படும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

# மதரஸாக்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## அமைச்சர் விமல் கோரிக்கை



கொழும்பு, நவ. 25

**இலங்கையில் இயங்கிவரும் மதரஸாக்களை மூடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.**

நாடாளுமன்றில் நேற்று நடந்த வரவு செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் கூறினார்.

இந்த நாட்டில் இனவாதப் பிரிவுகளை அடியோடு அழிக்கவே 69 இலட்சம் மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். மதரஸாப் பாடசாலைகள் என்ற பெயரில் தீவிரவாதத்தை தீன்போட்டு வளர்த்திருப்பது ஆணைக்குழுக்களின் விசாரணைகளில் இருந்து அம்பலமாகியுள்ளன. எனவே மதரஸாக்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-44)

### கொரோனா பெருந்தொற்று:

# பாடசாலை சுகாதாரத்துக்கு ரூ.105 பில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, நவ. 25

நாட்டிலுள்ள பாடசாலைகளில் கொரோனா பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்காக 105 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக்கு மத்தியில் பாடசாலைகள் கற்றல் நடவடிக்கைகளுக்காக நேற்றுமுன்தினம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டமைக்கு நாடாளாவிய ரீதியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. மாணவர்களின் வரவும் மந்த கதியிலேயே உள்ளன. சுகாதார நடவடிக்கைகளுக்காக என்னென்ன செய்யப்பட்டுள்ளன என்ற கேள்வியும் எழுப்பப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே கொரோனாப் பெருந்தொற்றைக் கையாள்வதற்கான சுகாதார நடவடிக்கைளுக்காக பாடசாலைளுக்கு 105 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# நீதிமன்றின் நடவடிக்கைகளில் ஜனாதிபதி தலையிட்டதில்லையாம்

## அலி சப்ரி சான்றிதழ்

நீதிமன்ற நடவடிக்கைகளில் ஜனாதிபதி இதுவரை தலையிட்டதில்லை. இனியும் தலையிட மாட்டார் என்று தெரிவித்தார் நீதியமைச்சரான அலி சப்ரி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் ஆணைக் குழுக்களின் சுயாதீனத் தன்மையை பாதுகாக்கவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவேன். அத்துடன் நீதிமன்ற நடவடிக்கைகளில் ஜனாதிபதி ஒரு போதும் தலையிட்டதும் இல்லை. தலையிடவும் மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

நாட்டில் இருக்கும் பிரதான நீதிமன்றங்களான உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பற்றுக்கு கடந்த 42 வருடமாக நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவில்லை. 20ஆவது திருத்தம் மூலம் ஜனாதிபதி நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளார். இந்த விடயத்தில் ஜனாதிபதி மிகவும் நேர்மையாகவே செயற்படுகின்றார் - என்றார். (ம-இ)

# பாதுகாப்புப் பற்றாக்குறையே மந்தமான வரவுக்கு காரணம்

## கிரியெல்ல குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 25

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் 5 - 10 வீதமான மாணவர்களே நேற்றுமுன்தினம் சமுகமளித்துள்ளனர். போதிய சுகாதாரப் பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாதமையே இதற்கான காரணம் என்று தெரிவித்தார் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்ன் கிரியெல்ல.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல் மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் உள்ள பாடசாலைகளைத் தவிர்ந்த பாடசாலைகள் நாடு முழுவதும் திறக்கப்பட்டுள்ளன. கண்டி தர்மராஜ வித்தியாலயத்தில் 4 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்கின்ற சூழலில் 75 பேர்தான் பாடசாலைக்கு வந்துள்ளனர். ஏனைய பாடசாலைகளிலும் இதேநிலைதான் உள்ளது. பாடசாலைகளில் பாதுகாப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளமை இதிலிருந்து தெளிவாக விளங்குகிறது - என்றார். (ம-44)



# வவுனியா - கிடாச்சூரியில் மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, நவ.25

வவுனியா கிடாச்சூரி பகுதியில் சட்டவிரோதமான முறையில் முதிரை மரக் குற்றிகளை கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி புளியங்குளம் விசேட அதிரடிப்படையினரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

வேலங்குளம் செங்கல் படையில் இருந்து கல்மடு ஊடாக நெளுக்குளம் பகுதிக்கு முதிரை மரங்கள் கடத்தப்படவுள்ளன புளியங்குளம் விசேட அதிரடிப் படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு நேற்று அதிகாலை 5 மணியளவில் சென்ற விசேட அதிரடிப் படையினரும் பொலிஸாரும் இணைந்து மரக்கடத்தலை முறியடித்தனர்.

இதன்போது பல இலட்சம் ரூபா பெறுமதியான 18 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட ஹப்ரக வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பி ஓடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-18,ரி3)

# வழக்குகளில் இருந்து ஆளுங்கட்சியினர் விடுவிக்கப்படுவதில் ஆச்சரியம் இல்லை

## நீதி அமைச்சரின் நிலைப்பாடு இது

கொழும்பு, நவ. 25

கடந்த ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியினருக்கு எதிராகத் (தற்போதைய ஆளுங்கட்சியினர்) தொடுக்கப்பட்ட வழக்குகளில் இருந்து தற்போது அவர்கள் விடுவிக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்று தெரிவித்தார் நீதி அமைச்சரான அலி சப்ரி.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியினருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளில் இருந்து தற்போது அவர்கள் விடுவிக்கப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனெனில் காரணங்கள் எதுவும் இல்லாமலும் அரசியல் அடிப்படையிலும் அன்று வழக்குகள் தொடுக்கப்பட்டதால் தற்போது விடுதலையாகின்றனர். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக, பிரதமர் மஹிந்த ராஜபக்ச, நாமல் ராஜபக்ச ஆகியோருக்கு எதிராக பொய்யான வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன - என்றார். (ம-இ)

## மாவீரர் நாள் கெடுபிடி:

# முல்லையில் துயிலுமில்லங்களில் படையினர் கண்காணிப்பு தீவிரம்

முல்லைத்தீவு, நவ.25

மாவீரர் வாரம் ஆரம்பிக்கப்பட்டு, மாவீரர் நாள் நெருக்கும் நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் படையினர், பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம், ஆலங்குளம், ஜயன்கன்குளம், போன்ற பகுதிகளில் வீதித்தடைகள் போடப்பட்டு பொலிஸார் மற்றும் துப்பாக்கி ஏந்திய படையினர் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை விசுவமடு தேராவில், அளம்பில், முள்ளிவாய்க்கால், முல்லைத்தீவு நகர்பகுதி ஆகிய பிரதேசங்களில் பொலிஸார் கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேவேளை படையினர் துப்பாக்கி ஏந்தியபடி, பீல் பைக்கில் விசுவமடு, புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால் வீதிகளில் காலையும் மாலையும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள். (ப-19)

## வேள்ட் விஷனால் 23,000 முகக்கவசங்கள்

கொழும்பு,நவ.25

கொரோனா வைரஸிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு உதவும், புரட்சிகரமான தொழில்நுட்பத்தைக் கொண்ட 23 ஆயிரத்துக்கும் அதிகமான முகக்கவசங்கள், சிறுவர்கள் மற்றும் முன்னரங்கப் பணியாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

சர்வதேச சுகாதாரத் தொழில்நுட்ப நிறுவனமான லிவிங்கார்ட் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த முகக்கவசங்கள், வேள்ட் விஷன் லங்கா அமைப்பின் ஊடாக வழங்கப்படவுள்ளன.

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த முகக்கவசங்கள், கொரோனா வைரஸில் 99.9 சதவீதத்துக்கும் அதிகமானவற்றை அழிக்கும் திறனைக் கொண்டவை. உலக சுகாதார நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட பாதுகாப்பு அளவான மூன்று அடுக்கு கவசங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த முகமூடிகளை ஏழு தடவைகள் பயன்படுத்திய பின்னரே, நீரில் அலச வேண்டியுள்ளது. அத்தோடு, இவ்வாறு 30 தடவைகள் வரையில் அலசிப் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. எனவே, சாதாரண பயன்பாட்டின் போது, ஒரு முகக்கவசத்தை 210 தடவைகள் பயன்படுத்தக்கூடியதாக அமையும்.

வடக்கு, கிழக்கு, வடமேல், ஊவா, மத்திய பிராந்தியங்களிலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு இவை விநியோகிக்கப்படும். அத்துடன் சுகாதாரப் பணியாளர்கள் உள்ளிட்ட முன்னரங்கப் பணியாளர்களுக்கும் இவை விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வாள் வெட்டில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, நவ.25

மிருசுவில் - உசன் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்காகி ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த 38 வயதுடைய குடும்பஸ்த்தர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ப-9)

## ஊரடங்கில் சிக்கிய மக்களுக்கு ரூபா 5 ஆயிரத்தை வழங்குங்கள்

### லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள்

கொழும்பு, நவ.25



தனிமைப்படுத்தல் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு மேலும் 5ஆயிரம் ரூபாவை வழங்குமாறு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது;

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ளவர்களால் எவ்வித பணிகளையும் செய்ய முடியாதுள்ளது. வெளியிலும் செல்ல முடியாது.

வாழ்வதற்கு வழிமுறையொன்று இல்லாதுள்ளனர். ஆகவே, அவர்களுக்கு மேலும் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும். நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் நேற்றையதினம் திறக்கப்பட்டுள்ள நிலையில், பாடசாலைகளுக்கு 5 சதவீதத்தக்கும், 10 சதவீதத்துக்கும் இடையிலான மாணவர்களே வருகை தந்துள்ளனர். பாடசாலைகளில் பாதுகாப்பு வசதிகள் மிகவும் குறைவாக உள்ளமை தொடர் பில் அச்சம் காணப்படுகின்றன - என்றார். (ப-இ)

## முடக்கம் நீக்கிய இடங்களில் மீண்டும் 44 தொற்றாளர்கள்

கொழும்பு, நவ.25



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட பகுதிகளில் 44 கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பொரளை பிரதேசத்தில் 25 பேரும், தெமட்டகொட பிரதேசத்தில் 15 பேரும், கம்பஹா மாவட்டத்தின் கடவத்தை பிரதேசத்தில் ஒருவரும், ஜா-எல பிரதேசத்தில் 3 பேரும் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுவரையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த இந்த பகுதிகள் நேற்றுமுன்தினம் காலை தனிமைப்படுத்தலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. (ஈ-இ)

## தரம் 5 புலமைப்பரீட்சை பெறுபேறுகள்

அண்மையில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் பாடசாலை ரீதியாகக் கிடைத்த பெறுபேறுகள்:-

**கிளி/மாசார் அ.த.க. பாடசாலை**

ஜெ.ராகவி - 180, கு.லதுர்ஜிகா - 178, து. தனுசயன்- 167

**யா/கம்பர்மலை வித்தியாலயம்**

க.கஜானன் - 192, செ.துவாகரன் - 191, ஜெ. சாத்வீகன் - 186, இ.லக்ஸிகா -178, க.மதுமிதன் - 175, ச.அபிதன் - 173, செ.சந்தோஷ் -162

**யா/உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை**

கி.அன்ரனிதுஸ்யனன் - 178, ஜெ.அனஸ்கா -170, த.தக்சீலா - 167,கு.புகழினி - 165, ஜெ.அபரிசன் - 163

**யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**

கி.ரிசிகேசன்-166

**யா / கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 44 மாணவர்களில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 9 பேர் பெற்றுள்ளனர். 91 வீதமான மாணவர்கள் 100 புள்ளிக்கு மேல் பெற்றுள்ளதோடு 98 வீதமான மாணவர்கள் 70 புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர்.

## மாணவர்கள் கௌரவிப்பு



சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த 13 மாணவர்கள் பாடசாலை சமூகத்தினரால் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-9)



மன்னார் எருக்கலம்பிட்டி கிராமத்தைச் சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

எருக்கலம்பிட்டி தாருஸ்ஸலாம் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் அர்ஷத் ஷபியா, கலீஸ் பாதிமா ஸபா, ஹசீன் ஷரா, மஹம்மது தாபிஸ் முஹம்மது நுஹான் ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-60)

# இரண்டு வழிகள் ஊடாக தொற்று ஏற்பட்டிருக்கலாம்!

## கிளிநொச்சி தொற்று தொடர்பில் விசாரணை தொடர்கிறது

யாழ்ப்பாணம், நவ. 25

**கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட வயோதிபருக்கு கொரோனாத் தொற்று இரண்டு வழிகள் ஊடாக ஏற்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

தொற்று அடையாளம் காணப்பட்டவர் எரிபொருள் விற்பனை நிலையத்தில் பணிபுரிந்து வருகின்றார். அவரது கடையில் பாரவூர்திகள் மற்றும் டிப்பர் வாகனங்களின் சாரதிகள், உதவியாளர்கள் ஒயில் வாங்குவதற்கு வந்து செல்கின்றனர். அண்மையில் தொற்றுக் கண்டறியப்பட்ட வீதி வேலைகளில் ஈடுபடும் நிறுவனத்தின் பணியாளர்களும் இங்கு தமது வாகனங்களில் எரிபொருள் நிரப்பிச் சென்றுள்ளனர்.

இவரது எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு அருகில் தண்ணீர் விற்பனையில் ஈடுபடும் கடைக்கு தென்னிலங்கையிலிருந்து தண்ணீர்ப் போத்தல்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

அவர்களில் ஒருவரால் வயோதிபருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

இந்த நிலையில் குடிதண்ணீர் போத்தல்களை மேல் மாகாணத்திலிருந்து எடுத்து வந்து கிளிநொச்சியில் விநியோகிக்கும் அந்த மாவட்டத்தில் வசிக்கும் இருவர் தொடர்பில் சுகாதாரத் துறையினரால் கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் முதியவரின் கடைக்கு வந்து செல்வதால் அவர்களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனையை நடத்த சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, நாட்டில் கொரோனா பரவல் அதிகமாகக் காணப்படும் மேல் மாகாணத்துக்குச் சென்று குடிதண்ணீர் போத்தல்களை எடுத்து வந்து கிளிநொச்சி மாவட்டத்தில் விநியோகிக்கும் முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தோருக்கு பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்க சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். தற்போது தென்னிலங்கையில் இருக்கும் முகவர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்களை கிளிநொச்சிக்குத் திரும்புமாறு நேற்று சுகாதாரத் துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களை தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனை நடத்தவும் சுகாதாரத் துறையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஒ.5)

## பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். சமூக செயற்பாட்டு மையத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் விழிப்புணர்வு செயற்பாடு இம்முறை "கொவிட் 19 இடர் சூழ்நிலையிலும் வன்முறைகளை எதிர்கொள்ளும் பெண்களை வலுப்படுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் செயற்படுத்தப்படவுள்ளது.

பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் விழிப்புணர்வு செயற்பாடானது உலகளாவிய ரீதியில் கார்த்திகை மாதம் 25ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் 10ஆம் திகதி வரை செயற்படுத்தப்படுகின்றது. அதன்படியே யாழ். சமூகச் செயற்பாட்டு மையத்தாலும் அந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு இன்று யாழ் மாவட்டச் செயலகத்தில் உதவிச் செயலர் ம.பிரதீபனால் விழிப்புணர்வு பிரசுரம் வெளியிட்டு வைக்கப்பட்டு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## செய்கையாளர்களுக்கு விதைகள் கையளிப்பு

மன்னார்,நவ.25

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) ஏற்பாட்டில் மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட செய்கையாளர்களுக்கு விதைகள் நேற்று வழங்கப்பட்டன.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தச்சனா மருதமடு பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கே கௌப்பி, பயறு, உழுந்து போன்ற பயிர் விதைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மடு பிரதேச செயலாளர் திருமதி.வினோஜிதா மடு திட்டமிடல் அதிகாரி, கிராம அலுவலர் மற்றும் மெசிடோ நிறுவன ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ- 56)

## கோத்தாவுக்கு மோடி வாழ்த்து

ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடத்தைப் பூர்த்திசெய்த இலங்கை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

அந்தப் பாராட்டுக் கடிதத்தில் மேலும் உள்ளாவது;

கொவிட்-19 சவால்கள் நிறைந்த காலப்பகுதிக்கு மத்தியில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் வலுவான ஒத்துழைப்பானது இருநாட்டு மக்களினதும் நட்புறவைப் பிரதிபலிக்கிறது. கொவிட்-19 பெருநோய்க்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஆதரவினை வழங்கி செயற்படுவதில் உறுதியாகவுள்ள அதேநேரம், இலங்கையின் அபிவிருத்தி தேவைகளை முன்னுரிமை அடிப்படையில் நிறைவு செய்வதற்கும் இந்தியா திடசங்கற்பம் பூண்டுள்ளது என்றுள்ளது. (ப)

### போதைப்பொருள் விவகாரம்;

## இலங்கையர் ஒருவருக்கு அமெரிக்காவில் மறியல்

கொழும்பு, நவ.25

அமெரிக்காவிலிருந்து கொலம்பியாவுக்குப் பயணம் செய்த புலம்பெயர் இலங்கையர் ஒருவர் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டு மறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று அந் நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கையில் பிறந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்து ரொரன்றோவில் வசித்து வரும் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் பயணித்த வாகனத்திலிருந்து 14.79 கிலோகிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவருக்கு போதைப்பொருள்களை நாட்டுக்குள் கொண்டு வந்ததற்காக எட்டு ஆண்டுகளும், போதைப்பொருள் வைத்திருந்ததற்காக ஆறு ஆண்டுகளும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)


வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 26.10.2020 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

அமரர் கருணாநிதி கௌரி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.11.2020) புதன்கிழமை கீரிமலை புனிததீர்த்தக்கரையில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை மறுதினம் (27.11.2020) வெள்ளிக்கிழமை முற்பகல்11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



குடும்பத்தினர்.
மயிலணி வடக்கு, சுன்னாகம்.


## அனைத்து வகையான ரயர்களும் உள்நாட்டிலேயே உற்பத்தியாகும்

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஐரோப்பிய நாடுகளின் மட்டத்திலான அனைத்து வகை உயர்தர ரயர்களும் உள்நாட்டு கைத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன என கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

தென்கிழக்காசியாவில்பெரும்ரயர்தொழிற்சாலையான ரிஜ்வே டயர் தொழிற்சாலைக்குப் பயணம் செய்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முதற்கட்டமாக 100 மில்லியன் டொலர் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்சாலைக்கு இரண்டாம் கட்டமாக 150 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படவுள்ளது. இந்த உற்பத்திகளில் 80 வீதமானவை ஏற்றுமதி செய்யப்படவுள்ளதோடு தொழிற்சாலையை சுற்றி வாழும் இளைஞர் யுவதிகளுக்குத் தொழில்வாய்ப்பும் வழங்கப்பட உள்ளது. இரண்டாம் கட்டத்தின் பின்னர் ரயர் உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டு அந்நிய செலாவணியை ஈட்டவுள்ளது - என்றார். (ஐ)



## மாணவன் மீது துப்பாக்கிச் சூடு: மருத்துவர் விளக்கமறியலில்

கொழும்பு, நவ. 25
பாடசாலை மாணவன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய மருத்துவர் கைதுசெய்யப்பட்டு, நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். எர்ரவில தர்மபால வித்தியாலய மைதானத்தில் கிரிக்கெட் விளையாடிய மாணவன், பந்தை எடுக்க மருத்துவரின் வீட்டு வளவுக்குள் நுழைந்தபோதே, இந்தத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த பாடசாலை மாணவன், கொழும்பு தெற்கு, களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்தில் 17 வயது மாணவனின் வயிற்றில் காயம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மருத்துவரின் வீட்டு வளாகத்தில் மாணவன் பந்தை எடுக்க நுழைந்தபோது, ஏற்பட்ட வாக்குவாதத்திலேயே துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என பன்னிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
துப்பாக்கிச் சூடு நடத்திய மருத்துவரின் வாயு துப்பாக்கியைப் பொலிஸார் கைப்பற்றியதோடு இது தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர். (ஒ.22)

## மேன்முறையீட்டில் தெரிவான பட்டதாரிகள் விவரங்கள் வெளியீடு

கொழும்பு, நவ. 25
மேன்முறையீடுகளுக்கு அமைய தொழில் வாய்ப்புகளுக்காக தெரிவுசெய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர் விவரங்களை அரசு வெளியிட்டுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் அரசின் வேலைத்திட்டத்துக்குள் உள்வாங்கப்படாத பட்டதாரிகள் மேன்முறையீடுகளை மேற்கொள்ளுமாறு அரசு பணித்திருந்தது.
இதற்கமைய, தெரிவுசெய்யப்பட்ட மேலும் சில பட்டதாரிகளின் பெயர் விவரங்களை, அரச இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது. www.pubad.gov.lk என்ற இணையத்தில் பிரவேசிப்பதன் ஊடாக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (ஒ.5)

## மத்திய கிழக்கில் உள்ளோருக்கு நாடு திரும்புவதில் முன்னுரிமை

கொழும்பு, நவ.25
வெளிநாடுகளில் இருந்து இலங்கையர்களை அழைத்து வரும் நடவடிக்கையில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளவர்கள் அதிக சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ள காரணத்தால் அவர்களை அழைத்துவருவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.
நேற்றுக் காலை ஊடக நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (வ-இ)

### கொரோனாவால் சாவடைந்தவர்களின்

# பிரேதப்பெட்டிக்கான நிதியைக்கூட செலுத்த முடியாத நிலையில் அரசு!

### சாடுகின்றது ஜே.வி.பி.

**கொழும்பு, நவ. 25**
**கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் பிரேதப்பெட்டிகளுக்கான செலவைக்கூட செலுத்த முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது. இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனாவால் உயிரிழந்தவர்களின் உடல்களை வைப்பதற்கான பிரேதப்பெட்டிகளுக்கான பணத்தை அதிகாரிகள் உயிரிழந்தவர்களின் குடும்பங்களிடமிருந்து அறவிடுகின்றனர். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் பிரேதப் பெட்டிகளுக்கான செலவைக்கூட செலுத்த முடியாத நிலையில் இந்த அரசு உள்ளது. கொவிட் 19 சுகாதார நல சமூகப் பாதுகாப்பு நிதியத்தை உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குகளுக்காகப் பயன்படுத்துமாறு அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். உயிரிழந்தவர்களில் அநேகமானவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கொரோனா வைரஸால் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து பிரேதப் பெட்டிகளுக்கான பணத்தை அறவிடுவது எந்த வகையில் நியாயமானது?, எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.22)

## கரைச்சி பிரதேச சபைக்கு பொலிஸாரால் அச்சுறுத்தல்

கிளிநொச்சி, நவ. 25
கரைச்சிப் பிரதேச சபையால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் மரநடுகை திட்டத்தை நிறுத்துமாறு கிளிநொச்சிப் பொலிஸாரால் சபைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி தலைமை பொலிஸ் அதிகாரி கடிதம் மூலம் மரநடுகைத் திட்டத்தை நிறுத்துமாறு சபையைக் கோரியுள்ளார்.
பொலிஸ் அதிகாரியின் இந்தச் செயற்பாடு 1987ஆம் ஆண்டு பிரதேச சபைகள் கட்டளை சட்டத்துக்கு அமைய அதிகார துஸ்பிரயோகம் என்பதுடன் கௌரவ சபைகளினுடைய தத்துவங்களுக்குள் அத்துமீறி மேற்கொள்ளப்படும் அடாவடி செயற்பாடு எனவும் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் கண்டித்துள்ளார்.
இது தொடர்பில் குறித்த பொலிஸ் அதிகாரிக்கு பதில் கடிதம் எழுதி கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றுக்கு பிரதி இட்டுள்ள தவிசாளர், பிரதேச சபைகளுடைய மரநடுகை செயற்றிட்டங்களுக்கு பயங்கரவாத முலாம் பூசிப்பார்க்க பொலிஸார் விரும்புகிறார்கள். திட்டமிட்டபடி மரநடுகை இடம்பெறும். அதைத் தடுக்க நினைத்தால் நிர்வாகங்களை முடக்கி போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று அந்தக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-இ)

## இணையத்தளங்களுக்கு கோத்தா அரசு எச்சரிக்கை

கொழும்பு, நவ. 25
ஆதாரமற்ற போலிச் செய்திகளை வெளியிடும் பதிவுசெய்யப்படாத இணையத்தளங்களுக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது. இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.
குறித்த இணையத்தளங்களைத் தடைசெய்வது குறித்து இதுவரை முடிவெடுக்கப்படவில்லை எனவும், இது குறித்து ஆராயப்படுகின்றது என அவர் கூறினார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஒருவருக்கு எதிராக அவதூறு சுமத்தும் நோக்கத்துடன் பதிவு செய்யப்படாத பல இணையத்தளங்கள் சேற்றை வாரியிறைக்கும் தகவல்களை வெளியிடுகின்றன.
எந்த உத்தியோகபூர்வ வழிமுறைகளிலும் பதிவு செய்யப்படாத வெளிநாடுகளில் இருந்து இயங்கும் இந்த இணையத்தளங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசு கருதுகின்றது- என்றார். (ஒ.22)

## சுகாதார திணைக்களத்தில் கட்டுப்பாடுகள் அதிகரிப்பு

கொழும்பு, நவ.25
கொரோனாக் கட்டுப்பாட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுகாதார திணைக்களத்தின் மருந்து விநியோக அலுவலகத்துக்குள் நுழைவதற்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருந்து மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள நாளொன்றுக்கு 50க்கும் அதிகமான வாகனங்கள் இந்த அலுவலகத்துக்கு வந்து செல்வதால், இந்த மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நாடு முழுவதுமுள்ள சகல மருத்துவமனைகளிலும் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களை விநியோகிக்கும் பிரிவில் பணியாற்றும் அனைவருக்கும் நேற்றைய தினம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (வ-இ)

## சிங்கள நடிகருக்கு கொரோனா

கொழும்பு, நவ.25
இலங்கையின் முன்னணி கலைஞர் ஒருவரின் மகனும், பிரபல சிங்கள நடிகருமான ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கண்டியில் தொலைக்காட்சி நாடகம் ஒன்றில் படப்பிடிப்பில் பங்கேற்ற பின்னரே இவருக்கு கொரோனா அறிகுறி தென்பட்டது.
இதனையடுத்து அவர் பி.சி.ஆர் பரிசோதனை செய்தார். இதில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (ம-இ)

# ராஜபக்ச அரசின் அக்கிரமங்களை பார்த்துக்கொண்டு இருக்கமுடியாது

*சஜித்துடனான சந்திப்பின் பின்னர் சந்திரிகா கருத்து*

கொழும்பு, நவ. 25



**ராஜபக்ச அரசின் முறைகேடுகளை அநீதிகளை– கொடுஞ்செயல்களை – அக்கிரமங்களை எம்மால் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்க முடியாது. விரைவில் இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும்; தீர்வு வேண்டும். அதேவேளை, எதிர்க்கட்சியும் பலமாக இருக்க வேண்டும்.**

இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க. 'நாட்டு மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகவே ராஜபக்ச அரசு செயற்படுகின்றது.

கொரோனாவின் மூன்றாவது அலை நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த இந்த அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பிரதான காரணமாகும்' என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

'நாட்டினதும் மக்களினதும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருடன் விரிவாக் கலந்துரையாடியுள்ளேன்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் திடீர் சந்திப்பு நடைபெற்றது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடும்போதே சந்திரிகா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாவது, அண்மைக்கால அரசியல், சமூக மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. கொரோனா வைரஸ் பரவலின் அச்சுறுத்தல் மற்றும் சவால்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அதேபோன்று, இலங்கைக்குப் பொருத்தமான தேசிய சுற்றாடல் கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டிய தன் தேவை குறித்தும் பேசப்பட்டது. உலகம் எதிர்கொண்டுள்ள பருவகால மாற்றம் குறித்தும் இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன- என்றார். (ஒ.22)

## கார்த்திகை - 2020




உன்னுடைய தாய் இப்பொழுதும்
மடிப்பிச்சை எடுக்கிறாள்
உன்னுடைய சகோதரி இப்பொழுது
முது கன்னி ஆகிவிட்டாள்
உன்னுடைய நண்பன்
யாரிடம் சரணடைந்தானோ
அவனிடமே வேலை செய்கிறான்

விதைக்கப்பட்ட யாரும்
முளைக்கக்கூடாது என்று
ஒவ்வொரு நாளும்
கடவுளைப் பிரார்த்திக்கிறவன்
உனது மக்களின்
பிரதிநிதியாகி விட்டான்

நிறைவேறாத கனவு நீ
நீண்ட கடல் எல்லைகளின்
சொந்தக்காரன் நீ
எல்லாப் போகங்களிலும்
விற்கப்படும் நினைவும் நீ
எல்லா நீதிமன்றங்களிலும்
அவமதிக்கப்படுகிறாய்
ஈமத்தாழி ஒன்றுதான்
உனக்கிப்பொழுது
பாதுகாப்பான இடம்
இல்லாத நடுகல்லின் மீது
சிந்தும்
சூடான துளிக்கண்ணீரில்
இளைப்பாறு
பீட்சாவுக்காக யாருமிங்கே
போராடவில்லை என்பதை
உனது மக்கள் நிரூபிக்கட்டும்

நிலாந்தன்



## கொரோனாவின் பிடியில்
# 1039 பொலிஸார்

கொழும்பு, நவ.25

நாட்டில் இதுவரை ஆயிரத்து 039 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்களில் 238 பொலிஸ் விசேட அதிரடைப் படையினர் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை நாட்டில் அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களின் மொத்த எண்ணிக்கை 20 ஆயிரத்து 508 ஆக உயர்வடைந்துள்ளது. குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 14 ஆயிரத்து 497 ஆக உள்ளது. (வ-இ)

## பொலிஸாருக்கு 750 ஜீப் வண்டிகள்

கொழும்பு, நவ.25

பொலிஸாரின் பயன்பாட்டுக்கு 750 ஜீப் வண்டிகளை கொள்வனவு செய்வற்கான அனுமதியை அமைச்சரவை நேற்றுமுன்தினம் வழங்கியுள்ளது. இந்திய கடன் திட்டத்தின் கீழ் இந்த ஜீப் வண்டிகளை 3 கட்டங்களாக கொள்வனவு செய்ய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவற்றில் 600 வண்டிகள் சாதாரண பொலிஸ் பயன்பாட்டுக்கும் ஏனைய 150 ஜீப் வண்டிகள் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் பயன்பாட்டுக்கும் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ச முன்வைத்திருந்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைய இந்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தனிமைப்படுத்தல் நிலையங்களில்

கொழும்பு, நவ.25

முப்படையினரால் நிர்வகிக்கப்படும் 45 தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 4ஆயிரத்து 490 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 14, 497 பேர் குணமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

கொரோனாவால் இறந்தவரது

# ஜனாஸாவை அடக்கம்செய்ய அழுத்தம் கொடுத்தாரா சப்ரி?

**பரபரப்பு குற்றச்சாட்டு**

கொழும்பு, நவ. 25

கொரோனா வைரஸால் கொழும்பில் உயிரிழந்தவரது ஜனாஸாவைத் தகனம் செய்யாமல் நீதி அமைச்சர் அலிசப்ரி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அடக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு அண்மித்த இரத்மலான பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் பெண் கடந்த 15ஆம் திகதி கொரோனாவால் உயிரிழந்தார். அவர் நீதியமைச்சரின் உறவினர் என்பதால் நீதியமைச்சரது அழுத்தத்துக்கு மத்தியில் உடல் தகனம் செய்யப்படாமல், அடக்கம் செய்யப்பட்டது என்றார். எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் அமைச்சுப் பதவியில் இருந்தும், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுவேன் என்று நீதி அமைச்சர் தெரிவித்தார். (ம-இ)

# இன்றைய நாள்

**மேடம்:** பேச்சினால் சில விஷயங்களை முடிக்கும் நாள். உழைப்பிற்குப் பாராட்டு கிடைக்கும். ஒற்றுமையால் வீடு களை கட்டும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் திருப்தியைப் பெறு வீர்கள்.

**இடபம்:** கடந்த நாள்களின் வருத்தங்கள் மறையும் நாள். குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சி பற்றி பேசுவீர்கள். புதிய வரின் நட்பால் உற்சாகம் வரும். செலவு களைக் குறைக்க திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** செலவினங்கள் அதிகரிக்கும் நாள். மற்றவர்கள் உங்களைத் தவறா கப் புரிந்து கொள்ளக்கூடும். லேசான வருத்தமளிக்கும் செய்தி வரும். பணி க ளில் மிகுந்த கவனம் தேவை.

**கடகம்:** திட்டமிடாத செலவுகள் வரும் நாள். பிறரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மேலதிகாரி உங்களை தவறாக புரிந்து கொள்ள வாய்ப்புண்டு. கடவுள் நம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்குப் பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** மாறுபட்ட நாள். உங்களுக்கு கீழே பணிபுரிபவர்கள் மதிப்பார்கள். அலுவ லகத்தில் இழந்த உரிமைகள் மீளும். தொழிலில் சிறு மாற்றம் உண்டா கும். மனக்கலக்கங்கள் தீரும்.

**கன்னி:** பிரச்சினைகளை சாமர்த்திய மாகச் சமாளிக்கும் நாள். முயற்சியால் சில விஷயங்கள் வெற்றியாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து தேவையின்றி கவலைப்படுவீர்கள்.

**துலாம்:** அதிகம் உழைக்க வேண்டி யிருக்கும் நாள். நிலுவைத் தொகை கள் வசூலாகும். அலுவலகத்தில் உங்களின் புகழ் கூடும். திட்டமிட்ட செயலை வெற்றிகரமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தம்பதி இடையே கருத்து வேறுபாடு வந்து நீங்கும் நாள். பழைய கடனை நினைத்து கவலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சுல பமாகச் சமாளிப்பீர்கள்.

**தனுசு:** பணியில் விழிப்புடன் செயல்பட வேண்டிய நாள். குடும்பத்தாரின் ஒத்து ழைப்பு கிடைக்கும். நண்பர்களுக்காக விட்டுக் கொடுப்பீர்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மகரம்:** புதியவர்களின் நட்பு கிடைக்கும் நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். பணியாளர்கள் சிறு ஏமாற்றத்தைச் சந்திப்பர். வெளியூரிலி ருந்து சுபச்செய்தி செய்தி வரும்.

**கும்பம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றும் நாள். பணவரவு திருப்தி தரும். பெண்கள் பாடுபட்டு இலட்சியத்தை அடைவர்.

**மீனம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள். உடன்பிறந்தவர்கள் உதவுவார் கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் நாடி வருவார்கள்.

# 6 ஆயிரத்து 334 கைதிகளுக்கு எதிரான வழக்கைத் துரிதப்படுத்த நடவடிக்கை

## அரசியல் கைதிகள் எவரும் இல்லை

கொழும்பு, நவ. 25

**சிறைச்சாலைகளில் காணப்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் 6 ஆயிரத்து 334 கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.**

போதைப்பொருள் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு எதிரான வழக்கு விசாரணைகளே துரிதப்படுத்தப்படவுள்ளன. சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 2 கிராமுக்கும் குறைவான ஹெரோய்னை வைத்திருந்த குற்றச்சாட்டுகள் மற்றும் 5 கிலோ கிராமுக்கு குறைவான கஞ்சா கடத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் வழக்கு விசாரணைகளே இவ்வாறு துரிதப்படுத்தப்படவுள்ளன.

அவர்களின் தகவல்கள் அடங்கிய அறிக்கை நீதி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதி கள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் மற்றும் சிறைச்சாலைகளில் காணப்படும் இடநெருக்கடி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நேற்று கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது. சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோருக்கு இடையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது. (ஓ.22)

## மூச்சுத்திணறல் ஏற்பட்ட மாணவிக்கு தொற்றில்லை

கொழும்பு, நவ.25

மூச்சுத்திணறல் ஏற்பட்ட பாடசாலை மாணவிக்குக் கொரோனாத் தொற்றில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எம்பிலிபிட்டிய பகுதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலையொன்றின் மாணவி ஒருவருக்கு திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவர், சிகிச்சைக்காக எம்பிலிபிட்டிய மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதையடுத்து, மாணவியை பரிசோதித்த வைத்தியர்கள், குறித்த மாணவிக்கு கொரோனாத் தொற்றுக்கான எவ்வித அறிகுறிகளும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். (ற-இ)



## தனிமையிலிருந்த இருவர் வீடுகளுக்குத் திரும்பினர்

*கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, நவ. 25

கிளிநொச்சி மாவட்டத்தில் 516 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட ஐவரில் இருவர் சிகிச்சை முடிந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அந்த ஐவரும் வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தந்தவர்கள். வீடுகளுக்கு அனுப்பப்பட்ட இருவரும் மேலும் 14 நாள்களுக்கு சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

14 நாள்களின் பின்னர் அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விடுவிக்கப்படு வர். ஏனைய மூவரும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

திருவையாறு பகுதியில் அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியான ஆட்டுப்பட்டி தெருவிலிருந்து வருகை தந்திருந்தனர். தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்திலிருந்து அவர்கள் குறுக்குவழியைப் பயன்படுத்தியே வந்திருந்தனர் என்றே கூறமுடியும்.

அவர்கள் தமது சமூகப் பொறுப்பை உணராது, தங்களுடைய பாதுகாப்பு மற்றும் மற்றவருடைய பாதுகாப்பு பற்றி அக்கறை இல்லாத வகையில் செயற்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். (த-6)

# கொரோனாவை வைத்து அரசியல் லாபம் தேடாதீர்!

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, நவ.25

கொரோனாத் தடுப்பூசி மற்றும் பரிசோதனையிலிருந்து அரசியல் நன்மைகளைப் பெற வேண்டாம் என்று அனைத்து அரசியல் மற்றும் மதத் தலைவர்களையும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது என்று அந்தச் சங்கத்தின் உதவி செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொரோனாத் தடுப்பூசி மற்றும் சோதனை முறைகள் குறித்த தங்கள் அறிவிலிருந்து வெகு தொலைவில் எதுவும் பேச வேண்டாம்.

அரசியல்வாதிகள் மற்றும் மதத் தலைவர்களுக்கு மருத்துவத் துறை மற்றும் மருத்துவ பரிசோதனைகள் பற்றி எதுவும் தெரியாது. இது தொடர்பாகத் தவறான தகவல்களைப் பரப்புவது மக்களை குழப்பமடையச் செய்யும், மேலும் மருத்துவத்துறை மீது மக்களின் நம்பிக்கையும் சிதைந்துவிடும் - என்றார்.

மேலும் எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் புதிய கொரோனா கண்காணிப்பு முறையை நாட்டுக்கு வழங்கமுடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ற-இ)

## நோய் ஏற்பட்டால் உடனே மருத்துமனை செல்க!

### கர்ப்பிணிகளுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, நவ.25

கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏதேனும் நோய் நிலைமை அல்லது சிக்கல் ஏற்பட்டால் அவர்களை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு குடும்பநல விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

கொவிட் 19 அச்சுறுத்தல் காரணமாக மேல் மாகாணம் உள்ளிட்ட பகுதிகள் தனிமைப்படுத்தப் பட்டுள்ளன.

அங்குள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏதேனும் அவசர நிலைமை ஏற்பட்டால் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புத்தகத்தினைப் பயன்படுத்தி உடனடியாக மருத்துவமனைக்குச் செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## தரிசு நிலங்களிலும் இம்முறை நெற்செய்கை

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இம்முறை பெரும்போக நெற்செய்கையின்போது செய்கை பண்ணப்படாத வயல் நிலங்களிலும் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பயிர் செய்யப்படாத தரிசு நிலங்களாக காணப்பட்ட வயல்களை விவசாயிகள் துப்புரவு செய்து இம்முறை நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

ஊர்காவற்றுறை,வேலணை, புங்குடுதீவு, கோப்பாய், தென்மராட்சி மற்றும் வலிகாமம் போன்ற பகுதிகளில் கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இம்முறை சுமார் 12 ஆயிரம் ஹெக்ரேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது என மாவட்ட விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ-17)

## தென்னிலங்கையிலிருந்து திரும்பியவர் யாழில் சாவு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாணம் நகரில் கே.கே.எஸ் வீதியில் இயங்கும் உணவகத்தில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். தென்னிலங்கையிலிருந்து 3 நாள்களுக்கு முன் அவர் வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பணியாளர் நேற்றுமுன்தினம் இரவு திடீரென உயிரிழந்துள்ளார் என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவரது சடலத்திலிருந்து மாதிரிகள் பெறப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது என சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற உணவகம் மூடப்பட்டுள்ள துடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஒ.26)



குரு தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்கிறார். குருபெயர்ச்சி வாக்கிய பஞ்சாங்கப் படி இந்த ஆண்டு 15.11.2020 (ஞயிற்றுக்கிழமை) இரவு 11.48 மணிக்கு மகர ராசிக்கு மாறியிருக்கிறார். இந்த குருப்பெயர்ச்சி ஒவ்வொரு ராசிக்குமான பலன்களைப் பார்ப்போம்.

# குருபெயர்ச்சி பலன்கள்



சிம்மம்

**பெரிய மனிதர்களின் நட்பும், சகவாசமும் பெற்று விளங்கும் சிம்மராசி அன்பர்களே..**

நீங்கள் சூரியனைப் போல பிரகாசத்துடன் காணப்படுவீர்கள். மற்றவர்களிடமிருந்து தனித்துவத்தைப் பெற்றிருப்பீர்கள். உங்களின் செயல்பாடுகள் உங்களை முன்னிலைப்படுத்தும் இப்படிப்பட்ட குணநலன்களைக் கொண்ட உங்களுக்கு இந்த குரு பெயர்ச்சி சுமாரானநிலை. இதுவரை குருபகவான் உங்கள் ராசிக்கு 5ம் இடத்தில் இருந்து பல்வேறு நன்மைகளைச் செய்தார். அவரால் குடும்பம் மேம்பட்டிருக்கலாம். நல்ல பணப்புழக்கத்தைத் தந்திருப்பார். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளை நடத்தி வைத்திருப்பார்.

பிள்ளைகளால் பெருமை கிடைத்திருக்கும். பெண்களால் எண்ணற்ற முன்னேற்றத்தை அடைந்திருப்பீர்கள். இந்தநிலையில் இப்போது குருபெயர்ச்சி நடக்கிறது. குருபகவான் உங்கள் ராசிக்கு 5ம்இடத்தில் இருந்து 6ம் இடத்துக்கு அடியெடுத்து வைக்கிறார்.

இது சாதகமான நிலை என்று சொல்ல முடியாது. 5ம் இடத்தில் இருந்தது போன்ற நன்மைகளை அவரால் கொடுக்க முடியாது. அதேநேரம் மிகவும் பிற்போக்கான பலனையும் அவர் தரமாட்டார். பொதுவாக6ம் இடத்தில் இருக்கும் குரு உடல்நலத்தைப் பாதிப்புக்குள்ளாக்குவார்.

குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும்அவரது 9ஆம் இடத்து பார்வை மிகவும் சாதகமாகக் காணப்படுகிறது. குருவின்பார்வை மூலம் எந்த இடையூறுகளையும் தடுத்து நிறுத்தலாம். மேலும்அவர் 2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021செப்ரெம்பர் 14ஆம் திகதி வரைஅதிசாரம் பெற்று கும்பராசியில் இருக்கிறார். இதுசிறப்பான இடம். பிறகு 2021 நவம்பர் 13ஆம் திகதி அன்று முழுபெயர்ச்சி அடைந்து 7 ஆம்இடமான கும்பராசிக்கு மாறுகிறார். இது மிகவும்உயர்வான நிலை. அவர் குடும்பத்தில் மகிழ்ச்சியை அதிகரித்து சுப நிகழ்ச்சியைத் தருவார். செல்வாக்கு மேம்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எண்ணற்ற பலவசதிகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு உயர்வைத் தருவார். அதன்பிறகு 2022 ஏப்ரல் 14ம் திகதி அன்றுபெயர்ச்சிஅடைந்து 8ம் இடமான மீனராசிக்கு மாறுகிறார். இது சிறப்பான இடம் இல்லை.

அப்போது குரு மனவேதனையும், நிலையற்றதன்மையும் கொடுப்பார். பொருளாதாரச் சரிவை ஏற்படுத்துவார். வீண் விரோதத்தை உருவாக்குவார். மற்ற கிரகங்களின் நிலை சனிபகவான் தற்போது 5ம்இடமான தனுசுராசியில் உள்ளார். இது சிறப்பான இடம் அல்ல. 5ல்சனி இருக்கும் போது மனைவி, மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை உருவாக்கலாம்.

மனதில் ஏனோ இனம் புரியாத வேதனை குடிகொள்ளலாம். குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகளைத் தருவார். அவர் திருப்தியற்ற நிலையில் இருந்தாலும்அவரது 7ஆம் இடத்துபார்வை சிறப்பாக உள்ளன. இதனால் நன்மைகள் கிடைக்கும் .

இந்தநிலையில்அவர் 2020 டிசெம்பர் 26ஆம் திகதி அன்று மகராசிக்கு அடியெடுத்து வைக்கிறார்.

மேலும் சனியின் 10ம் இடத்துப்பார்வையும் சிறப்பாக அமையும். அதன் மூலம் அவர் பொருளாதார வளத்தையும், காரிய அனுகூலத்தையும் தருவார். தொழிலில் நல்ல முன்னேற்றத்தைக் கொடுப்பார். ராகு10ஆம் இடமான ரிஷபத்தில்இருக்கிறார். இது அவ்வளவு சிறப்பான இடம் அல்ல. இங்குஅவர்பொருள்இழப்பையும், சிறு சிறு உடல்உபாதைகளையும் கொடுப்பார். கேது இப்போது 4ம்இடமான விருச்சிகத்தில் இருக்கிறார். இது சிறப்பானஇடம் அல்ல. அவரால் தீயோர் சேர்க்கைக்கு ஆளாகி அவதியுறலாம். உடல் நலம் பாதிப்பு வரலாம். வயிறு பிரச்சினைவரும். இரண்டு கிரகங்களுமே சாதகமற்ற இடத்தில் இருக்கிறார்கள் என்று கவலை கொள்ளத் தேவை இல்லை. காரணம் கேதுவின் பின்னோக்கிய 11ம் இடத்துப் பார்வை உங்கள் ராசிக்கு 6இடமான மகரத்தில் விழுகிறது. இதனால் இது சிறப்பானஅம்சமாகும்.

குடும்பத்தில் சீரான வசதி இருக்கும்.தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கணவன்-மனைவி இடையே அன்பு பெருகும். உறவினர்கள் வகையில் அந்நியோனியம் நிலவும். சிலர் புதியவாகனம்வாங்கலாம்.திருமணம் போன்ற சுபகாரியங்கள் தடைபடலாம். மதிப்பு, மரியாதை சுமாராகவே இருக்கும்.எனவே வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். அநாவசிய செலவைத்தவிர்க்க வேண்டும். 2021 ஏப்ரல் 4ஆம் திகதி முதல் 2021 செப்ரெம்பர் 14 ஆம் திகதி வரை உங்கள் ஆற்றல் மேம்படும்.ஆன்மிக ஆன்றோர்களின் ஆசியும், அருளும் கிடைக்கும். கணவன் - மனைவி இடையே அன்பு இருக்கும். தடைபட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். குரு பொருளாதார வளத்தை அதிகரிக்க செய்வார்.

**பெண்கள்**

பெண்களால் மேன்மை கிடைக்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். உத்தியோகம் கடந்த காலத்தைவிட வேலைப் பளுஅதிகரிக்கும். அலைச்சல் இருக்கும். மேல் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும்.

**மாணவர்கள்**

மாணவர்கள் தீவிர முயற்சி எடுத்தால்தான் முன்னேற்றம் காண்பர். சிலர் தகாதசேர்க்கையால் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல்போகலாம். எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளில்சற்றுகவனம் செலுத்த வேண்டும்.

# மாவீரர் நாளைத் தடுப்பது புத்திசாதுரியமான செயலன்று

## ஆனந்தசங்கரி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், நவ.25

**1989** ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ஆம் திகதி கால் நூற்றாண்டுக்கு மேலாக மாவீரர் தினம் சில சமய நிகழ்வுடன் கொண்டாடப்பட்டு வருவதைத் தடுப்பது அரசாங்கத்தின் புத்திசாதுரியமான செயலன்று என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மாவீரர்களின் உறவினர்களை புலி ஆதரவாளர்கள் என்று அடையாளம் காண முடியாது. இந் நிகழ்வு ஒரு கால் நூற்றாண்டுக்கு மேலாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதால் அரசாங்கம் கூட இந்த மக்களுடைய உரிமையில் தலையிடக்கூடாதென்று கருதுவதே நியாயமானதாகும். தற்போது பிரபாகரன் இல்லாதபடியாலும் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதாலும் சமாதானம் மட்டுமே தழைத்தோங்க வேண்டும் என்பதாலும் இவர்களுடைய இந்த நிகழ்வுகளில் அரசாங்கம் தலையிட வேண்டாமென விநயமாக வேண்டுகிறேன் - என்றுள்ளது. (ப)



## கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாண மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் நிறுவுநரான கூட்டுறவாளர் சண்முகம் ஞானப்பிரகாசத்தின் முப்பதாவது ஆண்டு நினைவுதினம் சமாச மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

சமாச தலைவர் செ.இலகுநாதனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அன்னாரின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து, நினைவுரைகளும் நடத்தப்பட்டன. (ம-17)



## கொக்குவிலில் சேதன விவசாய உற்பத்திகளின் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், நவ. 25

கொக்குவில் பொற்பதி அறிவாலயம் முன்பாக சேதன விவசாய உற்பத்திகளின் விற்பனை நிலையம் ஒன்று கடந்த சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நஞ்சற்ற மரக்கறிகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ளவும், பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் பொற்பதி அறிவாலயத்தின் ஏற்பாட்டில் இது திறந்துவைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சதீஸ்வரன் விருந்தினராகக் கலந்து கொண்டு நிலையத்தைத் திறந்து வைத்தார். (து)

## இரு கிராம அலுவலர் பிரிவுகள் கண்டியில் நேற்றுமுதல் முடக்கம்

கொழும்பு, நவ. 25

கண்டி அக்குறணை பிரதேசத்தில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகள் நேற்றுமுதல் முடக்கப்பட்டுள்ளன.

அக்குறணையின் புலுகொஹதென்ன, தெலம்புகஹவத்த ஆகிய பிரதேசங்களிலேயே இந்தப் பயணத்தடை விதிக்கப்பட்டிருக்கின்றது. அக்குறணை சுகாதார மருத்துவ பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் இதுவரை 38 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)




## யாழ். முனீஸ்வரர் வீதியால் வாகனங்கள் செல்லத் தடை

யாழ்ப்பாணம், நவ.25

யாழ். நகரில் முனீஸ்வரர் வீதியூடாக வாகனங்கள் பயணிக்காத வகையில் வீதி மறிக்கப்பட்டு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பேருந்து தரிப்பு நிலையத்துக்கு முன்பாக முனீஸ்வரர் வீதிக்குச் செல்லும் நுழைவாயிலுக்கே இவ்வாறு வீதித் தடைத் தூண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த விதியிலிருக்கும் புடைவை விற்பனைக் கடைக்கு மக்கள் நடந்துசென்றே புடவைகளை வாங்க முடியும். இவ் வீதி நடைபாதை வீதியாகவும் மாற்றப்பட்டுள்ளது. (ப)




## 50 ஹெக்ரெயரில் உழுந்துச்செய்கை

### குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், நவ.25

யாழ்ப்பாண மாவட்டத்தில் இம்முறை 50 ஹெக்ரேயர் நிலப் பரப்பில் உழுந்துச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரம் கிலோ வரையான உழுந்து செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதிகமான செய்கையாளர்கள் உழுந்துச் செய்கையில் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது உழுந்தின் விலை அதிகரித்துள்ளதுடன், அவற்றுக்கான பற்றாக்குறையும் காணப்படுகிறது. ஒரு கிலோ உழுந்தின் விலை 1300 ரூபாவுக்கு தற்போது விற்பனை செய்யப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (ப-17)

## பொலிஸ்மா அதிபராக விக்ரமரத்ன நாடாளுமன்றப் பேரவை அனுமதி!

கொழும்பு, நவ. 25

பொலிஸ்மா அதிபர் பதவிக்காக தற்போது பதில் பொலிஸ்மா அதிபராகச் செயற்பட்டுவரும் சீ.டி. விக்ரமரத்னவை நியமிப்பதற்கு நாடாளுமன்றப் பேரவையின் அனுமதி கிடைத்துள்ளது.

சுமார் ஒன்றரை வருடங்களாக வெற்றிடமாக உள்ள பொலிஸ்மா அதிபர் பதவிக்கு, பதில் பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரமரத்னவை நாடாளுமன்ற பேரவை அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபயவின் பரிந்துரையை அடுத்து நாடாளுமன்றப் பேரவை இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (ம-இ)

## 4 நாள்களின் பின் பி.சி.ஆர் முடிவுகள்

### மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

கொழும்பு, நவ.25

களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகளில் பி.சி.ஆர் சோதனைகளின் முடிவுகள் 4 நாள்களுக்குப் பிறகுதான் வெளியிடப்படுகின்றன என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.


இந்நிலையில், களுத்துறை மாவட்டத்தில் சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளின் முடிவுகள் 3 அல்லது 4 நாள்கள் கடந்த நிலையிலும் இன்னும் கிடைக்கவில்லை என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது. 3 நாள்கள் தாமதமாகப் பெறப்பட்ட சோதனை முடிவுகள் இனிச் செல்லுபடியாகாது என்று தெரிவித்த அரச மருத்



துவ அதிகாரிகள் சங்கம் பி. ஆர். சோதனைகளின் முடிவு கடந்த 24 மணி நேரத்திற் வெளியிடப்பட வேண்டும் எ கோரிக்கை விடுத்துள்ளது.

# கொரோனா நிலைமை இன்னும் சீராகவில்லை

## சு.சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் தெரிவிப்பு



கொழும்பு, நவ.25

**நாட்டில் வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை ஒரு சீரான கோட்டில் சென்று கொண்டிருக்கிறது.**

எனினும் நாடு முழுமையாக சுமூகமான நிலையை அடைந்துள்ளது என்று உறுதியாகக் கூற முடியாது எனத் தெரிவித்த சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத், எதிர்வரும் நாள்களில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் மக்களின் ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே வைரஸ் கட்டுப்படுத்தப்படுள்ளமை குறித்து உறுதியாகக் கூற முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இது அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். எனினும் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்கள் எண்ணிக்கை குறித்தவொரு சமநிலையை அடையக்கூடிய எவில் வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அதனைத் தற்போது உறுதியாகக் கூற முடியாது. கடந்த 24 மணித்தியாலஙகளில் சுமார் 10 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. தற்போது ஏனைய பிரதேசங்களில் குறைந்தளவான தொற்றாளர்களே இனங்காணப்படுகின்றனர். எனவே எதிர்வரும் நாள்களில் அதிகளவான பரிசோதனைகளை முன்னெடுத்து தொற்றாளர்களைத் துரிதமாக இனங்காண்பதே எமது இலக்காகும். நாம் எதிர்பார்த்ததைப் போன்று சிறு சிறு கொத்தணிகள் உருவாகின்றன. எனவே தான் தினமும் சுமார் 400 என தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என்றார். (பு)



# அரிய சருகுமான் உயிருடன் மீட்பு

கொழும்பு,நவ.25

அரியவகை சந்தன நிறமுடைய சருகுமான் ஒன்று, வெண்ணப்புவ நாத்தாண்டி தப்போவப் பகுதியில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

புத்தளம் வனஜீவராசிகள் பிராந்திய காரியாலயத்துக்கு, மக்களால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து, சருகுமான் மீட்கப்பட்டது.

இச் சருகுமான் நிகாவெரட்டிய மிருக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படும் என்று வனஜீவராசிகள் புத்தளம் பிராந்திய உதவி அதிகாரி சஞ்சீவ வீரசேகர தெரிவித்துள்ளார். (சு-இ)

# போலி டொலருடன் இருவர் கைது

திருகோணமலை, நவ.25

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஒவ்வொன்றும் 100 அமெரிக்க டொலர் பெறுமதி பொறிக்கப்பட்ட 372 போலி நாணயத் தாள்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 48 மற்றும் 49 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



சந்தேகநபர்களை கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-இ)

# ஹெரோய்னுடன் நால்வர் கைது

முள்ளியவளை, நவ.25

நவமுள்ளியவளை கிச்சிராபுரம் பகுதியில் ஹெரோய்ன் போதை பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு பேர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 250 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு இளைஞர்களும் கிச்சிராபுரம் பகுதியைச் சேர்ந்த 20 வயதுக்குட்பட்டவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ஐ-19)

# ஒலுமடு நூலகக் கிளை மாங்குளத்தில் அமைப்பு

மாங்குளம், நவ. 25

மாங்குளம் பகுதி மக்களின் நலன்கருதி புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் ஒலுமடு பொது நூலகத்தின் கிளை மாங்குளத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் பிரதேச மக்கள் மற்றும் அரச பணியாளர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து பிரதேச சபையின் தவிசாளரால் அண்மையில் இக் கிளை திறக்கப்பட்டது.

தற்போது ஒலுமடு பொது நூலகத்தின் கிளையாகச் செயற்படவுள்ள மாங்குளம் கிளை ஆளணிகள் கிடைக்கும் பட்சத்தில் நிரந்தர பொது நூலகமாக இக் கிளை செயற்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மீன்பிடிக்கச் சென்றவர்

# முதலை கடித்து சடலமாக மீட்பு

திருகோணமலை, நவ. 25



மீன்பிடிக்கச் சென்றவர் முதலைக்கடிக்கு இலக்காகி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வடிச்சலாறு கலப்பு பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தம்பலகாமம் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன் (வயது-55) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது;

நேற்றுமுன்தினம் மீன்பிடிக்கச் சென்ற நபர் இரவாகியும் வீட்டுக்கு வரவில்லை. இதனையடுத்து சம்பவம் தொடர்பில் தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்நிலையில் காணாமல் போன நபரின் உறவினர்கள் குறித்த பகுதியில் தேடுதல் நடாத்தியபோது முதலை கடித்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-இ)

# கொவிட்-19 தடுப்பு மருந்தின் அவசியத்தை அரசு உணரவில்லை

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 25

கொவிட்-19 வைரஸ் தடுப்பு மருந்தைக் கொள்வனவு செய்வதற்காக எதிர்வரும் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பிரத்தியேகமாக நிதி ஒதுக்கப்படவில்லை. இது விடயத்தில் அரசாங்கம் முறையான திட்டமிடலின்றிச் செயற்படுகின்றதா? அல்லது இதன் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணரவில்லையா? என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுவதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை இலங்கை மக்களுக்கு இருக்கிறது என்பதுடன் நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதேவேளை தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், புதிதாகத் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை சீரான கோட்டில் பயணிக்கிறது. இந்நிலையில் நாட்டின் சுகாதாரத்துறையினால் கையாள முடியாதளவுக்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். எனினும் கொவிட்



- 19 வைரஸ் தடுப்பு மருந்தை அனைவரும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வழங்குவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையிலேயே இதன் நீண்டகால வெற்றி தங்கியிருக்கிறது - என்றுள்ளது. (பு)

# வெட்டுப்புள்ளியில் அநீதி: மலையகத்தில் போராட்டம்

நுவரெலியா, நவ. 25
பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்வதற்கான வெட்டுப்புள்ளியில், மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, நுவரெலியாவில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் ஏற்பாட்டில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"இறுதியாக நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சையானது புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாகவும், பழைய பாடத்திட்டத்துக்கு அமைவாகவுமே நடத்தப்பட்டது. இதனடிப்படையில் வெட்டுப்புள்ளிகளை நிர்ணயிக்கின்ற பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் கடைபிடிக்கப் படவில்லை. இதனால் பாதிக்கப்பட்டிருப்பது எங்களுடைய மாணவர்கள். இதற்கு உரிய பதிலைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று பாடசாலைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் ராமராஜ் தெரிவித்தார். (க-இ)



*மன்னாரில்*

# இடரை எதிர்கொள்வதற்கு 55 நலன்புரி நிலையங்கள்

**மன்னார், நவ. 25**
**மன்னாரில் வெள்ள இடர்களை எதிர்கொள்ள 55 நலன்புரி நிலையங்களுடன், முன்னாயத்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்று மன்னார் அனர்த்த முகாமைத்துவ அதிகாரி கனகரெத்தினம் திலீபன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, மன்னார் மாவட்டத்தில் மழை காலங்களில் எந்தப் பிரதேசங்கள் எவ்வாறான பாதிப்புகளை அடைந்திருந்தன போன்ற தரவுகள் அடிப்படையில், பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கட்டுக்கரைக் குளம் உட்பட முக்கியமான 8 குளங்களின் நீர் மட்டங்கள் அடிக்கடி அவதானிக்கப்பட்டு வருகின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கு மீட்புக் குழுவாக இராணுவம் மற்றும் கடற்படையினர் தயாராகவுள்ளனர்.

பாதிக்கப்படும் மக்களுக்கான உணவு, குடிதண்ணீர் போன்றவற்றை அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நேரத்தில் கொரோனா பாதிப்புள்ளவர்கள் அடையாளம் காணப்பட்டால், அவர்களைத் தனிமைப்படுத்துவதற்கு மாந்தை மேற்கு வண்ணாமோட்டைப் பகுதியில் இடம் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளது. என்றார். (க-213)

*ஆயிரம் ரூபா ஊதியம் வழங்க மறுத்தால்*

# நிறுவனங்களுடைய ஒப்பந்தம் நிறுத்தம்

கொழும்பு, நவ. 25
தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவை ஊதியமாக வழங்க மறுக்கும் நிறுவனங்களின் ஒப்பந்தம் நிறுத்தப்படும் அல்லது மீளாய்வு செய்யப்படும் என்று அரசு எச்சரித்துள்ளது.


2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியம் ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ 2021 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிந்தார்.

இருப்பினும் தங்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்புகளுக்கு அரசால் மானியம் வழங்கப்படா விட்டால் ஆயிரம் ரூபாவை ஊதியமாக வழங்க மாட்டோம் என்று நிறுவனங்கள் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆயிரம் ரூபாவை செலுத்த மறுக்கும் நிறுவனங்களுடனான ஒப்பந்தத்தை மறு ஆய்வு செய்வோம் அல்லது நிறுத்துவோம் -என்றார். (ம-இ)

*கொரோனா பெருந்தொற்று:*

# போதைப் பாவனையாளர்களுக்கு கடும் பாதுகாப்புடன் சிகிச்சைகள்



கொழும்பு, நவ. 25
போதைப்பொருள் பாவனையாளர்கள் சிகிச்சையில் இருந்து தப்பிச்செல்ல எத்தனித்தால் அவர்களுக்கு கடும் பாதுகாப்புடன் சிகிச்சை வழங்கப்படும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பெருந்தொற்றுக்கான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பலர் தப்பிச் சென்றுள்ளனர். அவ்வாறுதப்பிச்சென்றவர்களில் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் பாவனையாளர்கள். எனவே போதைப்பொருள் பாவனையாளர்களுக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டால் அவர்களுக்கு பாதுகாப்புடன் சிகிச்சை வழங்கப்படும் என்றார். (ம-இ)

*மேல்மாகாணத்தில்*

## பாடசாலைகளை ஆரம்பிப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுமாம்

கொழும்பு, நவ. 25
மேல்மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நெருக்கடியான சூழ்நிலையில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகளைத் தொடர்ந்து மூடி வைப்பதால், மாணவர்களின் எதிர்காலமே பாதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் மேல்மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தல் பிரதேசங்களைத் தவிர்த்து ஏனைய பகுதிகளில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. ஒரு சில பாடசாலைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றன. குறைபாடுகளுக்குத் தீர்வு காணும் வரை பாடசாலைகளை மூடி வைக்க முடியுமா? பாடசாலைகளை மீள ஆரம்பிக்கப்பட்டது குறித்து பல தரப்பினர் பலவிதமான குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்கள். அரசியல் காரணிகளைக் கொண்டு முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை ஒருபோதும் ஏற்க முடியாது. அதற்கு கவனம் செலுத்த வேண்டிய அவசியமும் கிடையாது. மேல்மாகாணம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது -என்றார். (ப-இ)

## இலங்கைத் தமிழருக்கு கனடாவில் உயர்விருது

கொழும்பு, நவ. 25
கனடியபாதுகாப்புப்படையில் 22 ஆண்டுகள் நற்பணிஆற்றியமைக்காக, கனேடிய பாதுகாப்புப் படைத் தலைமையக முதுநிலை நிதியியல் நிர்வாகியும் இலங்கைத்தமிழருமான மதியாபரணம் வாகீசன் கனடிய உயர் விருதைப் பெற்றுள்ளார். குறித்த உயர் விருதைப் பெற்றுக்கொண்ட முதல் இலங்கைத் தமிழ் கனடியர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நிலங்களைச் சுவீகரிக்கும்போது இழப்பீடும் வழங்கப்படவேண்டும்

*இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 25
நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக நிலங்கள் சுவீகரிக்கப்படும் போது அவற்றுக்கான இழப்பீடு, குறித்த திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் வழங்கப்பட வேண்டும் என நீர்ப்பாசன அமைச்சரும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டு விவகாரம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நிலங்களை இழக்கும் பொது மக்களின் திருப்தி தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். நீதி கிடைக்கக்கூடிய வகையில் மக்களுக்கு தொடர்ந்து இழப்பீடு வழங்குவதன் மூலம் இத் திட்டத்துக்கு அவர்களின் ஆசீர்வாதம் பெறப்பட வேண்டும். இதற்கு விரைவில் உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்றார்.

உமா ஓயா பல்நோக்கு நீர்த் திட்டத்தால் காணிகளை இழந்த 6ஆயிரம் குடும்பங்களுக்கு மாத்திரம் இன்னமும் இழப்பீடு கிடைக்காமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா, அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோது, அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (ப)

# பதவி வெற்றிடங்கள்

**வடக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ்வரும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2020**

01. வடக்கு மாகாண தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆரம்பக் கல்வி (ஆங்கிலம்) ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு I (இ) தரத்திற்கு. ஆங்கில டிப்ளோமாதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

02. வடக்கு மாகாண தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர கணித. விஞ்ஞானத் துறை மற்றும் பொது ஆங்கிலப் பாடம் ஆகியவற்றுக்கு நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு - I(அ) தரப் பதவிக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2020

தமிழ் மற்றும் சிங்களம் மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.12.23 ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk Recruitment and Exam - Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத் திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி. திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாணபொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்குமாகாணம்.**
**25.11.2020**

# மரண அறிவித்தல்



## திருமதி அன்னலட்சுமி தம்பிஜயா

அனலைதீவு 5ஆம் வட்டாரத்தைப் (ஐயனார் கோவிலடி) பிறப்பிடமாகவும் புளியங்கூடல் சந்தி வேலணையை வதிவிடமாகவும் தற்போது ரொரன்டோ, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தம்பிஜயா அவர்கள் 22.11.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான தம்பிப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற தம்பிஜயா தம்பிப் பிள்ளை (ஒளி, ஒலி அமைப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீகலா, ஸ்ரீகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், தர்மகுலசிங்கம், மங்களராணி (செல்வி) ஆகியோரின் அன்பு மாமியும், சரஸ்வதி, கனசபை (UK), பரஞ்சோதி, செல்வராணி, ராஜரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்றவர்களான சபாரட்ணம், பொன்னுத்துரை, கணபதிப்பிள்ளை, சிவசுப்ரமணியம் (ஒளி, ஒலி அமைப் பாளர்), தெய்வானைப்பிள்ளை, காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் தவமணிதேவி, சரோஜினிதேவி, சொர்ணலிங்கம், சுதந்திரதேவி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, இரத் தினம், பத்மாவதி, சுந்தரவல்லி, முருகேசப்பிள்ளை ஆகியோரின் சகலியும், ஸ்ரீராஜ் - சுஜிதா, நிரோசன், நீரஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், சக்தி வீரனின் அன்புப்பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
ஸ்ரீகலா (மகள்) - (416) 871-8827
ஸ்ரீகரன் (மகன்) - (416) 839-9000
ஸ்ரீராஜ் (பேரன்) - (416) 303-2222
நிரோசன் (பேரன்) - (416) 845-2222

**பார்வைக்கு**
சனிக்கிழமை 28/11/2020, 06:00 பி.ப - 09:00 பி.ப
ஞாயிற்றுக்கிழமை 29/11/2020, 8:00 மு.ப - 9:00 மு.ப
முகவரி: Chapel Ridge Funeral Home> 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை:** திகதி: ஞாயிற்றுக்கிழமை 29/11/2020, 9:00 மு.ப - **11:00** மு.ப
**முகவரி: Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada**

**தகனம்:**
திகதி: ஞாயிற்றுக்கிழமை 29/11/2020, 11:30 பி.ப
**முகவரி: Highland Hills, 12492 Woodbine Ave, Gormley, ON LOH 1G0, Canada**

**215/18, இராசாவின்தோட்ட வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 6967**

தகவல்:
ச.இராஜதுரை (பெறாமகன்)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கண் மகிழ 05 . 06 . 1971



மனம் நெகிழ 26 . 10 . 2020

## அமரர் தங்கவடிவேல் கிருபாகரன்

**(B.Sc.M.Phil.**
**ஆசிரியர், விபுலானந்த கல்லூரி, திருகோணமலை)**

கடந்த 26.10.2020 ஆம் திகதி இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி குறுஞ் செய்தி (SMS) ஊடாகவும் மற்றும் உணவு, சிற்றுண்டிகள் வழங்கியும், எம்முடன் துயர் பகிர்ந்து ஆறுதலளித்த அனைத்து உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.11.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**Dr. சுலோசனா**
**கிருபாகரன்**
**(மருத்துவ பொறுப்பதிகாரி**
**பஞ்சகர்ம வைத்தியசாலை)**
**கப்பல்துறை, திருகோணமலை.**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 10 . 08 . 1940



**மறைவு** 24 . 11 . 2020

## திருமதி இராஜலக்சுமி அருமைநாயகம்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், தாவடி தெற்கினை வசிப்பிடமாகவும் தற்போது சூராவத்தை சுன்னா கத்தில் வசித்தவருமான திருமதி இராஜலக்சுமி அருமைநாயகம் நேற்று (24.11.2020) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பிராசா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருமை நாயகத்தின் அன்பு மனைவியும், ஜெயந்தகுமார் (லண்டன்), நாகசயந்தினி (ஓய்வுபெற்ற உபதபால் அதிபர் - கோண்டாவில் மேற்கு), லோகேஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தமுருகன் (லண்டன்), கோவிந்த ராணி (கனடா), ஜெயந்தாதேவி, சந்திரகுமார் (லண்டன்), காலஞ்சென்ற ரோஹினி ஆகியோரின் பாசமிகு தாயும், காந்தகுமாரி (லண்டன்), காலஞ்சென்ற சிறீகாந்தன் மற்றும் சந்திரமதி (சுவிஸ்), மல்லிகா (லண்டன்), கணேசலிங்கம் (சுவிஸ்), சிவகுமார் (வவுனியா), சௌமியா (லண்டன்) ஆகியோரின் மாமியும், பாலசுப்பிரமணியம் (ஆவுஸ்ரேலியா - ஓய்வுபெற்ற பொறியியலாளர்), பரமானந்தம், காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரதனிகா - மார்டின் (லண்டன்), கேசனா - ஸ்ரெபன் (லண்டன்), சந்தோஷ் (லண்டன்), கேசிகா - பிரதாபன் (உத்தியோகத்தர் மல்லாகம் நீதி மன்றம்), சோபிகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வேலணை பிரதேசம்), கஜேந்திரன் (முகாமை யாளர் - செங்கடகலபினான்ஸ்), சிவடக்சன் (உப அஞ்சல் அதிபர் - கோண்டாவில் மேற்கு), லோஜிகா, சகானா (சுவிஸ்), விஜய் (சுவிஸ்), ஆராதனா (சுவிஸ்), பானுயா (சுவிஸ்), சரணிகா (கனடா), கிருத்திகன் (லண்டன்), காயத்திரி (லண்டன்), வர்ணிஷா, தாருஷா, ரோஹினி (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், ஸாருதி, தஸ்வின், அக்ஷரா, நத்தனியல் (லண்டன்), கெய்லன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2020) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அம்மன் கோயிலடி சூராவத்தை சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
021 2242 496
077 6580 607
076 5821 427
077 0181 833
076 7036 542

### நகர்கின்றது...

இரவு 8 மணியளவில், முல்லைத்தீவிலிருந்து 211 கிலோ மீற்றர் தொலைவிலும் பருத்தித்துறையில் இருந்து 251 கிலோ மீற்றர் தொலைவிலும் கிழக்காக நிலைகொண்டுள்ள நிவர் புயலானது வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து வருகின்றது. இதன் காரணமாக காற்றுடன் கூடிய மழையுடனான காலநிலை தொடரும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் துறை மூத்த விரிவுரையாளர் ந.பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று புதன்கிழமை அதிகாலை 12.20 அளவில் முல்லைத்தீவுக்கு அருகாக நகரும். இதன்போது புயலின் மையத்தின் வெளிப்பகுதி முல்லைத்தீவிலிருந்து சரியாக 129 கி.மீ. தொலைவிலும், புயலின் மையம் 171 கி.மீ. தொலைவிலும் காணப்படும்.

இன்று புதன்கிழமை அதிகாலை 2 மணிக்கு புயலின் மையம் சாளையில் இருந்து 150 கி.மீ. தொலைவிலும், அதிகாலை 4 மணியளவில் 138 கி.மீ. தொலைவிலும் காணப்படும். காலை 10 மணியளவில் புயலின் மையம் பருத்தித்துறையிலிருந்து 118 கி.மீ. தூரத்திலும், புயலின் மையத்தின் வெளிப்பகுதி 72 கி.மீ. தூரத்திலும் காணப்படும்.

முற்பகல் 11 மணியளவில் புயலின் மையத்தின் வெளிப்பகுதி பருத்தித்துறையிலிருந்து 80 கி.மீ. தொலைவிலும் காணப்படும்.

அதன் பின்னர் வடக்கு நோக்கி நகரும் நிவர் புயலானது இன்று நள்ளிரவு அல்லது நாளை அதிகாலை தமிழ்நாட்டின் புதுச்சேரியில் கரையைக் கடப்பதற்கான வாய்ப்புண்டு. இந்தக் கணிப்பு புயலின் தற்போதைய நகர்வு வேகத்தின் அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுள்ளது. புயலின் நகர்வு வேகத்தில் மாற்றம் ஏற்பட்டால் மேலுள்ள கணிப்பிலும் மாற்றங்கள் நிகழலாம்.

நாளை வரை மழை இருக்கும். அதன்பின் படிப்படியாக குறைந்து விடும். காற்றின் வேகம் படிப்படியாக அதிகரிக்கும். முல்லைத்தீவு மக்கள் குறிப்பாகக் கரையோரப் பகுதி மக்கள், வடமராட்சி கிழக்கு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை மற்றும் காங்கேசன்துறை பகுதி மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தின் கிழக்கு மற்றும் வடக்கு கடற்பகுதி மிகவும் கொந்தளிப்பாக காணப்படும். அலைகளின் உயரம் 6 9 அடிவரை உயரும் என்பதால் சில சமயம் சில பகுதிகளில் கடல்நீர் தரைப்பகுதிக்குள் வரவும் வாய்ப்புண்டு.

இந்த நிவர் புயலால் வட மாகாணத்திற்கு நேரடியாக எந்தப் பாதிப்பும் இல்லை என்பதால் மேற்கூறிய விடயங்களில் அவதானமாக இருந்தால் எமக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாது, என்று தெரிவித்துள்ளார். (ஒ,5)

### நினைவேந்தலை....

வான் நீதிமன்றங்களில் முன்னிலையாகி உண்மைகளை வெளிப்படுத்த வேண்டும் என்று சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா, சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இந்தத் தகவலை சட்ட மா அதிபரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் அரச சட்டவாதி நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார். நினைவேந்தலுக்கான தடை உத்தரவுகளை கட்டுப்படுத்துவதற்காக தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்களை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கடந்த வாரம் நிராகரித்தது.

பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகள் மேற்கொண்டுள்ள தடைகளையும் மீறி நவம்பர் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வடக்கு மாகாணத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். மன்னார் மற்றும் வவுனியா நீதிவான் நீதிமன்றங்கள் முன்னதாக நினைவு கூரல்களுக்கு எதிராகத் தடை உத்தரவுகளைப் பிறப்பித்தன. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் நேற்றுச் சமர்ப்பணங்களை முன்வைத்தனர். அதிகாரிகள் குழு இன்று (நேற்று) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றுக்குச் செல்லவும் தயாராக இருந்தது. பலத்த மழை காரணமாக விமானம் மூலம் அங்கு செல்வதில் தடங்கல் ஏற்பட்டது. அவர்கள் நாளை (இன்று) யாழ்ப்பாணம் நீதிமன்றில் சமர்ப்பணத்தை முன்வைப்பார்கள் என்றும் அரச சட்டவாதி நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார். (எ-இ)

### தனிமைப்படுத்திய...

வர்கள் முல்லைத் தீவு தனிமைப்படுத்தல் முகாமில் உள்ளவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் 215 பேரின் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (எ)

### சீரற்ற...

அறிக்கையிடப்பட்டுள்ளது. பருத்தித்துறை, காரைநகர் மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 40 குடும்பங்கள் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ,5)

### பணியாளர்...

நோயால் உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் இருந்து கிளிநொச்சி, திருமுறிகண்டியைச் சேர்ந்த தர்மலிங்கம் தயாபாரன் (வயது48) என்பவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு உணவகத்தில் உறக்கத்துக்குச் சென்றவர், நேற்றுக் காலை சடலமாகக் காணப்பட்டார்.

அதையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. அங்கு மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் அவர் இருதய நோயால் உயிரிழந்துள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டது. அதையடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 03 . 01 . 1940

இறப்பு 24 . 10 . 2020

**பிலிப் றோச்**

அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஊற்றாய்
எம்முடன் வாழ்வாய் என இருக்க
கொடிய நோய் கொன்றதேனோ
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உம் நினைவுடன் வாழும்

55, புதுவீதி, கொய்யாத்தோட்டம், பாசையூர்.

குடும்பத்தினர், சகோதரர்கள்

## இருபத்தேழாம் ஆண்டில் நினைவலைகள்



தோற்றம் 26 . 09 . 1929

ஒடுக்கம் 27 . 11 . 1993

திதி : கார்த்திகை மாத பூர்வபக்க ஏகாதசி

**அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்**

(ஓய்வு பெற்ற P.W.D ஓவசியர், R.M.C(R.D.A)

சீர் இணுவைப் பதியினிலே
சிறப்போடு வாழ்ந்தவரே
சிந்தையிலே எந்நாளும்
சிறப்புக்கள் உடையவரே
சினம் இல்லாவாழ்வதனை
சிரசதன் மேல் கொண்டவரே
சிறப்பு ஒழுக்கமென்றீர்
சிந்தித்தே வாழ்கின்றோம் நாம்.

"இன்பகம்"
இணுவில் மேற்கு,
இணுவில்

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**இராசரத்தினம் விக்னேஸ்வரி**

V.H.லேன், இருபாலையைப் பிறப்பிடமாகவும் பழனி ஆண்டவர் கோயிலடி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் விக்னேஸ்வரி நேற்று (24.11.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மங்களேஸ்வரன், கோமளேஸ்வரன், சிவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பார்த்திபன், காண்டீபன், சோபிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், மீரா, சங்கீதகுமாரி, புவனராஜ் ஆகியோரின் அன்பு மாமியும், சாஜகான், சரண்ஜா, சாருஜன், கிருத்திக், கிசான் யர்விஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2020) புதன் கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.
077 3863 502

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவில்லலும்



அன்னை மடியில் 08 . 01 . 1948

ஆண்டவன் அடியில் 26 . 10 . 2020

**அமரர் சுபத்திராதேவி அசோக்குமார்**

கடந்த 26.10.2020 ஆம் திகதி அவுஸ்திரேலியா மெல்பேர்ண் நகரில் காலமான எமது குடும்பக் குலவிளக்கின் மரணச் செய்தியறிந்து நேரிலும், தொலைபேசி, குறுஞ் செய்தி (SMS) ஊடாகவும் மற்றும் உணவு, சிற்றுண்டிகள் வழங்கியும் எம்முடன் துயர் பகிர்ந்து ஆறுதலளித்த அனைத்து உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது 31 ஆம் நாள் அந்தியேட்டி ஆத்ம சாந்தி நிகழ்வுகள் இன்று (25.11.2020) மெல்பேர்ணில் நடைபெறும். அன்றைய தினம் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் நாகர்கோயில் வீதி, எழுதுமட்டுவாழில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அருட்பதி, எழுதுமட்டுவாழ்.

குடும்பத்தினர்.

## யாழ். மாநகரகத்துக்குள்...

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளிலேயே இத்தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். 70 வயதுடைய இந்த வயோதிபப் பெண் உட்பட மூவர் கடந்த 11ஆம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர். இவர்கள் உறவினர் வீடொன்றில் தங்கி நின்றுள்ளனர். இவர்கள் கொழும்பில் இருந்து வந்த விடயம் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்படவில்லை. இவர் தனது சொந்த வாகனத்தில் கிளிநொச்சிக்கும் சென்று திரும்பியிருக்கின்றார். அதன் பின்னரே தகவல் அறிந்த சுகாதாரப் பிரிவினர் அவரைத் தனிமைப்படுத்தினர். அவருடன் வீட்டில் இருந்தவர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர் கடந்த 21ஆம் திகதி கிளிநொச்சி சென்று திரும்பினார் என்றும், அந்தத் தகவல் அறிந்து 22ஆம் திகதி அவர் தனிமைப்படுத்தப்பட்டார் என்றும் சுகாதாரப் பிரிவினரிடம் இருந்தும், அயலவர்களிடம் இருந்தும் நம்பகரமாக அறிய முடிந்தது. ஆனால் அவர் 15ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டார் என்று வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. தனிமைப்படுத்தப்பட்டவருக்கு யாழ்ப்பாணம் மாநகர சபைச் பொது சுகாதார வைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் தொடர்பில் இருந்தவர்களை இனங்காணும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## யாழ்ப்பாணத்தில்...

வரையிலான 12 மணி நேரத்தில் 11.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியே பதிவாகியுள்ளது என திருநெல்வேலியில் அமைந்துள்ள வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரதீபன் தெரிவித்தார். (ஓ.5)

## நினைவேந்த...

பிற்பகல் மன்றில் முன்னிலையாவார் என்று அரச சட்டவாதியால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய வழக்கு பிற்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது. பிற்பகல் வழக்கு விசாரணைக்கு அழைக்கப்பட்ட போதும் காலநிலை சீரின்மை காரணமாக மூத்த பிரதி மன்றாடியார் அதிபதி இன்று காலை மன்றில் முன்னிலையா வார் என்று அரச சட்டவாதி ச.யாதவன் மன்றுக்கு அறிவித்தார். அதனால் வழக்கு இன்று முற்பகல் 11 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது. வழக்கு நேற்றுக் காலை எடுத்துக் கொள்ளப்பட்டபோது பிரதிவாதிகள் சார்பில் மன்றில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி ந.சிறிகாந்தா நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்தார். அவர் தனது சமர்ப்பணத்தில் முக்கியமான விடயங்களைச் சுட்டிக்காட்டி பல கேள்விகளையும் எழுப்பினார்.

**சட்டப் பிரிவு தவறு**

அவர் தனது சமர்ப்பணத்தில், பொலிஸார் இந்த வழக்கை குற்றவியல் நடைமுறைக் கோவைச் சட்டத்தின் 106ஆம் பிரிவின் கீழ் இத்தகைய விண்ணப்பங்க ளைத் தாக்கல் செய்ய முடியாது.

அந்தச் சட்டப் பிரிவு, ஒரு நபர் அல்லது நபர்கள் தங்கள் பொறுப்பில் அல்லது ஆட்சியில் இருக்கும் காணி அல்லது ஆதனங்கள் தொடர்பாக அவர்களுடைய நடவடிக்கைகளாலே பொதுமக்களுக்கு சட்டவிரோதமாக தொல்லை அல்லது இழப்பு, தடை மற்றும் மனித வாழ்வுக்கு அபாயம் அல்லது ஆரோக்கியம் அல்லது பாதுகாப்பு தொடர்பிலே ஆபத்து ஏற்படும் பொழுது அல்லது கலவரம் மற்றும் சச்சரவு ஏற்படக் கூடிய சூழ்நிலையில் அதனை தடுப்பதற்கு மாத்திரமே இந்தப் பிரிவில் வழக்கைத் தாக்கல் செய்யமுடியும். அதற்கு தடைக் கட்டளையை பெற்றுக் கொள்ள முடியும்.

இது முழுக்க முழுக்க சமூகத்தின் ஒரு சிலரின் நடவடிக்கைகளால் ஏற்படக் கூடிய சட்டவிரோதமான விளைவுகளை தடுப்பதற்கான பிரிவு. இதனை ஒரு பொது நிகழ்வு அல்லது சமூகத்தின் ஒரு பகுதியினர் அல்லது பெரும் பகுதியினர் ஈடுபடுகின்ற ஒரு வைபவம் தொடர்பில் பொலிஸார் நாட முடியாது. இது சில மட்டுப்படுத்தப்பட்ட தேவைகளுக்காக சூழ்நிலைகளை அடிப்படையாகக் கொண்டது. இவ்வளவு காலமும் இந்தப் பிரிவின் கீழ் இதுவரையில் பல வருடங்களாக வழங்கப்பட்டிருக்கின்ற மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்புக்கள் அனைத்தும் இத்தகைய சூழ்நிலைகளைத்தான் குறிப் பிட்டிருக்கின்றன. இதனை மக்கள் பெருமளவில் உணர்வுகளை வெளிப்படுத்தி நினைவேந்தல்களை நினைவுகூருகின்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவது சட்டவிரோதமானது. இந்தச் சட்டப் பிரிவின் நோக்கத்துக்கு மாறானது.

**தடுப்பது சட்டவிரோதம்**

பொலிஸ் தரப்பில், தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம் ஒன்றின் இறந்த உறுப்பினர்கள் நினைவுகூரப்பட இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இறந்தவர்களுக்கு கட்சியோ இயக்கமோ கிடையாது. அவர்கள் கடந்த காலத்துக்குரியவர்கள். அவர்களின் காலம் முடிந்து விட்டது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையில் பயங்கரவாத இயக்கம் ஒன்றுக்கு ஆதரவான நடவடிக்கை என்று குறிப்பிட்டு இறந்தவர்களை நினைவுகூர்வதை தடுப்பது சட்டவிரோதமானது.

உண்மையிலேயே பொலிஸார் தங்களின் நிலைப்பாட்டின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க விரும்பினால் பொருத்தமான சட்டத்தின் சரியான பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்விதம் செயற்பட முடியாது. ஆனால் இதனைத்தான் அவர்கள் மீண்டும் மீண்டும் செய்து கொண்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தனி நபர்களால் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவதற்கு தனக்கு அதிகாரம் இல்லை என்று மேல் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது. தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது என்பதால் அது தொடர்பில் மேல் நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என்று குறிப்பிட்டது. அது சரியான நிலைப்பாடு. உண்மையில் அந்த வழக்கு மேன்முறையீட்டு நீதி மன்றில்தான் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**தவறான வியாக்கியானம்**

முழு நாட்டின் மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிமன்றில் தாக்கல் செய்யப்படுவதுதான் முறையானது. இதைத்தான் நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டித் தள்ளுபடி செய்தது. இப்பொழுது அந்தத் தீர்ப்பை தவறாக வியாக்கியானம் செய்து பொலிஸார், 106 ஆம் பிரிவின் கீழான தங்கள் விண்ணப்பங்களை நியா யப்படுத்த முயற்சிக்கின்றார்கள். இது நேர்மையானதோ முறையானதோ அல்ல. சட்டத்துக்கு விரோதமாக ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்றால் அவை தொடர்பில் பொலிஸார் எடுக்க முனைகின்ற நடவடிக்கைகள் சட்டத்துக்கு அமைவாக இருத்தல் வேண்டும். இப்பொழுது 106 ஆவது பிரிவை துஷ்பிரயோகம் செய்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

**கட்டுப்பாட்டுடன் அனுமதி**

மல்லாகம் நீதிவான் நீதிமன்று பொலிஸாரின் வழக்கை நிராகரித்துள்ளது. சில கட்டுப்பாடுகளை விதித்து அவற்றைக் கடைப்பிடித்து அதற்கு அமைவாக நினைவேந்தலை செய்ய முடியும் என்று கூறியுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்ட இந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு எதுவும் பொலிஸாரால் தாக்கல் செய்யப்படவில்லை. அதே நேரத்தில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் இதே பிரிவில் தாக்கல் செய்த மூன்று வழக்குகளை மீளப் பெற்றுள்ளார்கள். அதற்கு காரணம் கோரப்பட்ட போது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றின் தீர்ப்பை சுட்டிக்காட்டியுள்ளார்கள். இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயம். அந்தத் தீர்ப்பு தவறாக வியாக்கியா னப்படுத்தப்படுகின்றது. இதேவேளையில் பொலிஸார் தடைக்கட்டளை பெற்றுக் கொண்ட வேறு சில நீதிமன்றங்களில் அந்தத் தடைக்கட்டளைகளை நிலைக்க வைக்க தொடர்ந்து முயற்சிக்கின்றனர்.

தடைக்கட்டளைகளுக்கு எதிராக விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கையில் அந்தத் தடைக்கட்டளைகளை தக்க வைக்க முயற்சிக்கின்றார்கள்.

**ஒரே சட்டம்**

இந்த மூன்று நிலைப்பாடுகளும் வெவ்வேறானவை. ஒரே விடயம் தொடர்பில் வெவ்வேறான நிலைப்பாடுகள் பொலிஸ் தரப்பில் காணப்படுகின்றன. ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் அது இந்த விடயத்திலும் பின்பற்றப்பட வேண்டும். மன்னாரிலும் முல்லைத் தீவிலும் கிளிநொச்சி யிலும் தடுக்கப்படும் அதே விடயத்தை இப்பொழுது பருத்தித்துறையிலும் மல்லாகத்திலும் செய்ய முடியும்.

ஆகவே இந்த விடயத்தில் ஓர் திட்ட வட்டமான நிலைப்பாடு வேண்டும். 106ஆம் பிரிவின் கீழ் விண்ணப்பங்கள் செய்யப்பட்டதால்தான் இந்த நிலைமை ஏற்பட்டது. எங்களைப் பொறுத்த மட்டில் பொலிஸாரைக் குறை சொல்ல விரும்பவில்லை. அவர்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டளைகளைத்தான் அவர்கள் நிறைவேற்றுகின்றார்கள். அந்தக் கட்டளைகளை வழங்குகின்றவர்கள் நீதிமன்றின் முன்னால் இல்லை. அவர்கள் வரவும் மாட்டார்கள்.

இப்பொழுதுள்ள நிலைமையில் பொலிஸாரின் நிலைப்பாடும் எங்கள் நிலைப்பாடும் ஒன்றுக்கொன்று எதிராக உள்ளன. அறிவுபூர்வமாக சிந்தித்தால் இந்த விடயத்தில் தேவையற்ற சிக்கல்களை உருவாக்கி பிரச்சினையை உருவாக்காமல் ஓர் சமநிலையை கொண்டு வரமுடியும். மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பின்பற்றினால் சுமூகமான நிலைமை ஏற்படும்.

**இப்போது என்ன ஆபத்து?**

கடந்த வருடம் இந்த நினைவேந்தல்கள் அனுமதிக்கப்பட்டன. அதே சூழ்நிலைதான் இப்போதும் இருந்து கொண்டிருக்கின்றது. மேலதிகமாக இப்போது கொரோனாத் தொற்று நோய் வந்து புகுந்து இருக்கின்றது. கடந்த வருடம் சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்டதை ஏன் இந்த வருடமும் அனுமதிக்க முடியாது. இந்த விடயத்தில் கொரோனா ஒரு பிரச்சினையில்லை. கொரோனாவை கையாள தனியான சட்டம் இருக்கின்றது. தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நோய் தடுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ளலாம். அதில் பிரச்சினை இல்லை. ஆனால் உண்மையில் ஒரு சில நோக்கங்களுக்காகவே இந்த வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. இதில் பொறுப்போடு கூடிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. மல்லாகம் நீதிவான் நீதிமன்ற தீர்ப்பைப் பின்பற்றி இந்த வழக்கு தீர்பளிக்கப்பட்டால் எங்களால் பூரண ஒத்துழைப்பை வழங்க முடியும். இதைவிடுத்து இந்த நாட்டில் இல்லாத புலிகள் இயக்கத்தை சுட்டிக்காட்டி கற்பனையான பயங்கரவாதத்தோடு நிழல் குத்துச் சண்டை நடத்தக் கூடாது. ஆகவே இந்த விடயத்தில் நீதிமன்று சகல விடயங்களையும் கருத்தில் எடுத்து முறையான தீர்ப்பை வழங்க வேண்டும்.

**சரியான தீர்ப்பு தேவை**


106ஆம் பிரிவைப் போல ஒரு பிரிவு இந்தியச் சட்டத்திலும் காணப்படுகின்றது. அது தொடர்பில் இந்திய உயர் நீதிமன்றத்தின் பல தீர்ப்புக்கள் உள்ளன. அந்தத் தீர்ப்புக்கள் அனைத்தும் இந்தச் சட்டம் எந்தச் சூழ்நிலையில் பொலிஸார் நாட முடியும் என்பதை தெட்டத் தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. இதேபோன்றதீர்ப்புக்கள் இலங்கையில் மேல் நிலை நீதிமன்றங்களால் இலங்கையிலும் வழங்கப்பட்டுள்ளன. ஆகவே நீதிமன்று இவ்விடயத்தில் சரியானதொரு தீர்ப்பை வழங்கவேண்டும் என்று வாதத்தை முன்வைத்திருந்தார். (ஓ.5,26)

## 5 ஆண்டுகளுக்குப்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தை படுகொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிவநேசதுரை சந்திரகாந்தன் மீதான வழக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுநரால் எதிரிகளுக்கு பிணை வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 7இன் உப பிரிவு ஒன்றின் காப்பு வாசகத்தின் அடிப்படையில் சட்ட மா அதிபரால் பிணை வழங்கும் அனுமதி வழங்கப்பட்டால் அதனை நிறைவேற்ற முடியும். அதனால் எதிரிகள் 5 பேரும் தலா ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையில் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். எதிரிகள் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டை அத்தாட்சிப்படுத்தி மன்றுக்கு சமர்ப்பிக்கவேண்டும். எதிரிகள் வெளிநாட்டுக்குச் செல்வதைத் தடை செய்யும் வகையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு தடை உத்தரவு வழங்கப்படுகிறது. மேலும் எதிரிகள் சாட்சிகளை அச்சுறுத்தவோ வழக்கு விசாரணைகளில் தலையிடவோ கூடாது. என்று மட்டக்களப்பு மேல் நீதிமன்றின் இந்த வழக்குக்கு நியமிக்கப்பட்ட மேல் நீதிமன்ற நீதிபதி டெனீஸ் சாந்தன் சூசைதாசன் கட்டளை வழங்கினார். 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி, மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நத்தார் நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டிருந்த போது, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை வழக்கில் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அன்றிலிருந்து அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ஒ.இ)

# தோல்வியை ட்ரம்ப் ஏற்பு!

## ஆட்சியை ஒப்படைப்பதற்குரிய நகர்வுகளையும் ஆரம்பித்தார்



**வொஷிங்டன், நவ. 25**
**ஜனாதிபதித் தேர்தலில் தனது தோல்வியை முதல் முறையாக ஏற்றுக் கொண்டுள்ளார் அமெரிக்க ஜனாதிபதியான ட்ரம்ப். இதையடுத்து ஆட்சியை ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான பைடனிடம் ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளையும் அவர் ஆரம்பித்தார்.**

கடந்த 3ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இந்தத் தேர்தலில் பைடன் அமோக வெற்றிபெற்றார். எனினும் பைடனின் வெற்றியை ட்ரம்ப் ஏற்க மறுத்தார்.

ஜனநாயக் கட்சியினர் தமது வாக்குகளை திருடிவிட்டனர், வாக்குகள் எண்ணிக்கையில் மோசடி இடம் பெற்றுள்ளது என்று ட்ரம்ப் குற்றஞ் சாட்டினார். அத்துடன் நின்றுவிடாது வாக்குகளை எண்ணும் பணியில் மோசடி இடம்பெற்றுள்ளதால் சில தொகுதிகளின் வாக்குகளை செல்லுபடியற்றதாக அறிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆனால், ஆதாரம் இல்லாமல் ட்ரம்பின் குற்றச்சாட்டை விசாரிக்க இயலாது என்று நீதிமன்றம் கைவிரித்தது. இதையடுத்து தோல்வியை ஏற்கும் நிலைக்கு ட்ரம்ப் வலிந்து தள்ளப்பட்டார்.

தோல்வியை ஏற்று அவர் தானாக வெளியேறாவிட்டால் வெள்ளை மாளிகையின் இரகசியப் பொலிஸார் ட்ரம்பை திரைமறைவில் (ஊடகங்களை அனுமதிக்காமல்) வெள்ளை மாளிகையில் இருந்து வெளியேற்றுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து தனது தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளார் ட்ரம்ப்.

அமெரிக்க ஜனாதிபதியை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம் என ஜி.எஸ்.ஏக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (ம-வ)

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

## கொரோனாவால்...

என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற்றிரவு அறிவித்துள்ளார்.
மூன்று ஆண்களும், ஒரு பெண்ணுமே உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
கினிகத்தேன பிரதேசத்தைச் சேர்ந்த 74 வயது ஆண், சியம்பலாபே பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயது ஆண், கொழும்பு 15ஐச் சேர்ந்த 73 வயது பெண், பண்டாரகம அட்டலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயது ஆண் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.
அதையடுத்து கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 94 ஆக உயர்வடைந்துள்ளது. (எ-22)



## அமைச்சரவையை அறிவித்த பைடன்

**வொஷிங்டன், நவ. 25**
அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள ஜோ பைடன் தனது தலைமையில் அமையவுள்ள புதிய அமைச்சரவை தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பை நேற்று வெளியிட்டார்.
அதன்படி, அன்டனி பிளின்கென் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவிக்கு தனது மூத்த ஆலோசகர்களில் ஒருவரான ஜாக் சல்லிவன் நியமனம் செய்துள்ளார்.
முன்னாள் அமெரிக்க தலைமை தூதர் ஜான் ஹரி ஜோ பைடனின் சிறப்புத் தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். உள்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சராக கியூபாவிலிருந்து வந்து அமெரிக்க குடியுரிமை பெற்ற அல்ஜென்ட்ரோ மயோர்காஸை நியமித்துள்ளார். (வ-இ)

## எரிமலை வெடிப்பில் உயிரிழந்த ஆண்டான் அடிமை உடல்கள் மீட்பு

**இத்தாலி, நவ. 25**
சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எரிமலை வெடிப்பால் அழிந்த ரோமானிய நகரான பொம்பேய்யில் உயிரிழந்த இருவரின் உடல் எச்சங்களை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
இதில் ஒருவர் பெரும்பாலும் உயர் அந்தஸ்து படைத்தவர் மற்றவர் அடிமையாக இருக்கலாம் என்றும் இவர்கள் எரிமலை வெடித்தபோது உயிர்தப்ப முயன்று அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வசுவியஸ் மலையில் கி.பி. 79இல் ஏற்பட்ட எரிமலை வெடிப்பில் பொம்பேய் நகர் முற்றாக அழிந்தது.
அந்த பண்டைய நகரின் புறநகர் பகுதி ஒன்றில் உள்ள வீடு ஒன்றில் புதிதாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியிலேயே இந்த உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன எனஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (வ-இ)



## 200 கோடி தடுப்பு மருந்துகள் ஏழை நாடுகளுக்கு பகிரப்படும்

### யுனிசெப் தெரிவிப்பு

**லண்டன், நவ. 25**
சுமார் 200 கோடி கொரோனா தடுப்பு மருந்துகள் அடுத்த ஆண்டு ஏழை நாடுகளுக்கு வழங்கப்படும் என்று யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.
ஆப்கானிஸ்தான், ஏமன் மற்றும் புருண்டி உள்ளிட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் என்றும், மருந்தை எடுத்துச் செல்ல 350 விமான நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது எனவும் யுனிசெப் தெரிவித்துள்ளது. கொரோனாத் தொற்றுக்கான தடுப்பு மருந்தைக் கண்டுபிடிக்கும் பணியில் அமெரிக்கா, ரஷ்யா, பிரித்தானியா உள்ளிட்ட நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

unicef

ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
**விற்பனைக்கு**
9000L கொள்ளளவைக் கொண்ட பாவித்த பழைய எரிபொருள் தாங்கி எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்.
பொது முகாமையாளர்
தொலைபேசி எண்:021 221 1648

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 183 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த
செல்வி
**கிருபாகரன் திலக்ஷிகா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவரை கற்பித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் கல்வியில் முன்னேற வாழ்த்துகின்றோம்
**வாழ்த்துவோர்:**
**அம்மம்மா, மாமா, சித்திமார்.**

# காய்ச்சல், வாந்தியால் குடும்பப் பெண் சாவு!




யாழ்ப்பாணம், நவ.25
காய்ச்சல், வாந்தி, வாந்திபேதியுடன் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பெண் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கேப்பாப்பிலவு, முள்ளியவளையைச் சேர்ந்த சந்திரசேகரம் கதிஸ்லா (வயது33) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். இவருக்கு திரு மணம் நடந்து 7 மாதங்களே ஆகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 21ஆம் திகதி இவர் காய்ச்சல், வாந்தி, வாந்திபேதி காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மறுநாள் 22ஆம் திகதி அவர் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற் கொண்டார். (எ-26)

# நேற்றும் 459 பேருக்கு கொரோனாத் தொற்று



கொழும்பு, நவ.25
இலங்கையில் நேற்றும் 459 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

இதற்கமைய கொரோனாவின் மூன்றாவது அலை மூலம் இது வரை 17 ஆயிரத்து 433 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.


நாட்டில் மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 ஆயிரத்து 967 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 14 ஆயி ரத்து 962 பேர் குணமடைந்துள்ளனர். 5 ஆயிரத்து 911 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 94 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-22)

## விற்பனைக்கு

தரமான மணல், சல்லி, கண்டகற்கள் என்ப வற்றை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
T.P: 076 760 3066, 077 947 6162

# சிறைக் கொத்தணி 717 ஆக அதிகரிப்பு

## கொரோனா கட்டுக்குள் என்கிறார் ஆணையாளர்



கொழும்பு, நவ.25
இலங்கையின் சிறைச்சாலை களில் கொரோனா வைரஸ் தொற் றுக்குள்ளான கைதிகளின் எண் ணிக்கை 717 ஆக அதிகரித்துள் ளது. வெலிக்கடை சிறைச்சாலை யின் பெண்கள் பிரிவில் தொற்றுக் குள்ளான கைதிகள் நேற்று அடை யாளம் காணப்பட்டதைத் தொடர்ந்தே இந்தத் தொகை அதிக ரித்துள்ளது என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளான 35 பெண் கைதிகள் நேற்று அடை யாளம் காணப்பட்டுள்ளனர். எனி னும், சிறைச்சாலைகள் அனைத் திலும் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளது எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

புதிய கைதிகளை பூஸா மற்றும் பழைய போகம்பறை சிறைச்சாலைகளில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சிறைச்சாலைகளில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும், சுகாதார நடைமுறைகளை மேற் பார்வை செய்வதற்கும் 5 பொதுச் சுகாதார பரிசோதகர்களை சுகா தார சேவைகள் பணிப்பாளர் சேவையில் ஈடுபடுத்தியுள்ளார்.

விடுதலை செய்யப்படும் கைதிகள் பி.சி.ஆர். பரிசோதனைகளைத் தொடர்ந்து வீரவிலை மற்றும் பல் லேகலை திறந்த சிறைச்சாலைகளில் கட்டாயத் தனி மைப்படுத்தலை மேற்கொண்ட பின்னரே சமூகத்துக்கு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் எனவும் துஷார உபுல்தெனிய தெரிவித் தார். (எ-22)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கோண்டாவில் இருபாலை வீதியில் பழனி ஆண்டவர் ஆலயம் அருகில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. 1 1/2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
(ராச வீதி சந்தியிலிருந்து 50 மீற்றர் தூரம்)
077 623 4204
077 288 0152

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 03 . 1927



மறைவு
07 . 12 . 2019

### நாகமுத்து காராளபிள்ளை

திதி: கார்த்திகை ஏகாதசி (25.11.2020)

குடும்பக் குல விளக்காய் ஒளி தந்ததீபம்
குன்றிலிட்ட தீபமாய் குலதெய்வம் போற்றியதீபம்
நாட்டிற்கும் நம்மூருக்கும் நவமளித்த தீபம்
கார்த்திகை மாதத்தில் சொர்க்க தீபமாய் மாறிய தீபம்.

எமது குடும்பத்தின் குல விளக்காய் இருந்து
எம்மை எல்லாம் பெற்றெடுத்துக் கல்வியூட்டி வளர்த்து
வையத்துள் வாழ்வாங்கு வாழவைத்த தெய்வமே!
நீங்கள் எமைவிட்டு நீங்கி
ஓராண்டுடென்ன ஒரு யுகம் மறைந்தாலும்
எம் இதயம் விட்டகலாதையா உங்கள் நினைவுகள்
தங்கள் ஆத்ம சாந்திக்காக செம்மணத்தம்புலத்தாளையும்,
ஸ்ரீ நாகபூஷணி அம்பாளையும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு

குடும்பத்தினர்

# தீ மூட்டிய பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.25
தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்ட வயோதிபப் பெண் சிகிச்சை பயனின்றி உயிரிழந் துள்ளார்.

கிளிநொச்சி, பெரியபரந்தனைச் சேர்ந்த கருப்பையா செல்வம் (வயது74) என்பவரே உயிரிழந் துள்ளார்.

இவர் சொந்த வாழ்க்கை தொடர் பான விரக்தியில் இருந்தார் என் றும், கடந்த 18 ஆம் திகதி தனக் குத் தானே தீ மூட்டிக்கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

இவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டிருந்த நிலையில் சிகிச்சை பய னின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (எ-26)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.